புதிய

# பரிமாணம்

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

அக்டோபர்–டிசம்பர் 2024

ஆதவன் அண்டத்தில் உதித்தது அதிசயம்,
அரசனே தொழுவத்தில் மலர்ந்ததும் அற்புதம்!
அவனியில் அறிவிக்கப்படும் இரட்சகராய்
அச்சரம் அனைத்திலும் உச்சரிக்கப்படுபவராய்
அண்டசராசரமும் ஆராதிக்கும், என்னே ஆச்சரியம்!

வாழ்வின் அல்லல் தீர்க்கும் அண்ணல் இவர்
இதயத்தின் கறைநீக்கி சமாதானம் அருள்பவர்
அனுதின வெற்றிவாழ்வுக்கு பெலனும் தந்திடுவார்
நடுத்தீர்வை தினத்திலே சன்மானம் ஈந்திடுவார்!
ஒப்பற்ற தலைவர் இவர், அடிச்சுவட்டில் நடந்திடுவோம்!

## ஒப்பற்ற சன்மானம்!



‘அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள்’





# பரிசு மழை

## கிறிஸ்துமஸ் பரிசு

2018 கிறிஸ்துமஸ் தினத்தன்று எங்கள் மகள் ஐடலின் நிருபாவின் குடும்பம் எங்களை மதிய விருந்துக்கு அழைத்திருந்தார்கள். பேரப் பிள்ளைகள் இருவரும் எங்களுடன் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் திடீரென தாத்தா மம்மம்மா நீங்கள் இருவரும் சேர்ந்து மறைந்திருக்கும் புதையலை கண் டெடுக்கப் போகிறீர்கள் என்றனர். ஒரு குறிப்பில் துவங்கி சங்கிலித் தொடராக அம்புக்குறி, அடையாளங்கள், செய்திக் குறிப்பு என ஒன்றன்பின் ஒன்றாக வீடு முழுவதும் தேடி இறுதியில் ஃபிரிட்ஸ்-க்கு (Refrigerator) கீழாக ஒரு கவர் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதில் வேறு ஏதேனும் குறிப்பு இருக்கிறதோ எனத் தேடியபோது அதில்தான் அந்த பொக்கிஷம், ஆமாம் புதையல் இருந்தது.

அவர்களது கைவண்ணத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியோடு ரூ.2000/- வைத்து தாத்தா, மம்மம்மா இது உங்களது ஊழியத்திற்கு என எழுதியிருந் தார்கள். ஆமாம், அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களுக்கு (Cam-India) அவர்களது கிறிஸ்துமஸ் வெகுமதி. நடுக்கத்தோடு கை அந்த பணத்தை எடுக்க, கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பாய்ந்திட இரு கண்மணிப் பிள்ளைகளை யும் ஆசைதீர முத்தமிட்டு வாழ்த் தினோம்.. **கொடுப்பதில்தான் எத்தனை இன்பம்!**



# சிநேகிதிக்குப் பரிசு

அல்பேனியா தேசத்தில் ஸ்கொப்ஜெ (Skopje) எனும் ஊரில் 26.8.1910ல் பிறந்து இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் அமைந்திருக்கும் கொல்கத் தாவில் 1929-ல் வந்திறங்கி, பள்ளியில் ஆசிரியையாக பணிசெய்தவர், சகோதரி மேரி தெரேசா (பிற்காலத்தில் அன்னை தெரேசா). தெரு ஓரங்களில் படுத்திருக்கும் பரிதாபத்திற்குரிய நோயாளிகள், ஆதர வற்றோர், தொழு நோயாளிகள் முதலிய மக்களைக் காணும்போதெல்லாம் அவர்களது கண்கள் குளமா கும்; இதயம் விம்மும். இரவெல்லாம் விழித்திருந்து பிரார்த்தனை செய்வார்கள். ஒருநாள் இந்த மக்க ளுக்கு உதவி செய்யச் சென்றபோது துர்நாற்றம் வீசும் சாக்கடைக்கு அருகில், எலும்பும் தோலுமாய்ப் படுத் திருந்த ஒரு மூதாட்டிக்கு இரண்டு ரொட்டித் துண்டு களை அன்போடும் கனிவோடும் கொடுத்தார்கள். ரொட்டித் துண்டுகளை வாங்கிக் கொண்ட மூதாட்டி யின் கண்களிலிருந்து தெறித்த நன்றி உணர்வு சகோதரி தெரேசாவின் இதயத்தில் மகிழ்ச்சி வெள்ள மாய் புரண்டோடியது. என்றாலும் ரொட்டித் துண்டு களை பெற்றுக்கொண்ட சில நொடிப்பொழுதில் மூதாட்டி செய்த அன்பின் செயல் தெரேசாவை ஆச்சரியப்படவும், கண்ணீர் சிந்தவும் வைத்தது. ஒரு ரொட்டியை தனது பழைய துணிகளண்டையில் வைத்துவிட்டு, தன்னைப் போலவே அதிக பசியோடிருந்த இன்னொரு வயோதிபப் பெண்ணுக்கு ஊர்ந்தும் தவழ்ந்தும் சென்று கொடுத்தார்களாம். நிறைவிலிருந்து அல்ல, தனது பசியினின்று; தனது மடியிலிருந்து அல்ல இலவசமாய் பெற்றுக் கொண்டதிலிருந்து! பசியாயிருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள் (மத்.24:35). **கொடுப்பதில்தான் எத்தனை இன்பம்!**



# லட்சுமிக்குப் பரிசு

கிறிஸ்துமஸ் நாட்களில் வழக்கமாக, என் பாட்டியம்மா திருமதி ரோஜா ஐயாத் துரை எல்லா மிஷனரிகளுக்கும், அவர்களை விசாரித்து வாழ்த்து அட்டை அனுப்புவது வழக்கம். ஒரு பெரிய நாட்குறிப்பேட்டில் 400க்கும் அதிகமான மிஷனரிகளின் முகவரிகள். இளம் வாலிப யுவதியாக நான் அதில் உள்ள அனைவருக்கும் வாழ்த்து அட்டையில் முகவரி எழுதி முடித்தவுடன் பாட்டி எனக்கு ரூ 250/- பரிசாக வழங்கினார்கள். அவ்வளவு பெரிய தொகையை



1999 ல் கையில் வாங்கிய நான் பெருமிதமாக உணர்ந்தேன். 16 வயதான எனக்கென்று வாங்கிக்கொள்ளும்படியான திட்டம் எதுவும் இல்லை. எங்கள் வீட்டு ஜெபக்குழுவுக்கு வந்த ஒரு ஆண்ட்டிக்கு லட்சுமி என்னும் பெயர் கொண்ட அருமை மகள் இருந்தாள். அவளும் அவள் அம்மாவும் ஒரு மண் குடிசையில் வாழ்ந்து வந்தனர்.

அவள் அம்மா தீப்பெட்டிகளை ஒட்டியும் சில வீடுகளில் வேலை செய்தும் குடும்பத்தை நடத்தி வந்தார்கள். கோடை விடுமுறையிலிருந்த லட்சுமியின் ஆசை என்னவென்று கேட்டேன். அவள் மே மாதம் நடக்கும் FMPB டேனிஷ் பேட்டை மாநில முகாமுக்கு வேனில் செல்வதே அவளுடைய ஆசையென்று கூறினாள். என் அம்மாவிடம் வேனில் ஒருவரை அழைத்துச் செல்ல எவ்வளவு செலவாகும் என்று விசாரித்த போது ரூ 200/- வாகன செலவு; ரூ 150 /- பதிவு கட்டணம் ஆக மொத்தம் ரூ 350/- என்று கூறினார்கள்.

என் பாட்டியம்மா கொடுத்த பரிசுத் தொகையை அவளது மாநில முகாம் செலவுக்காக செலுத்த ஆண்டவர் எனக்கு கிருபை செய்தார். அவள் முகத்தில் மிளிர்ந்த மகிழ்ச்சிக்கு எதுவும் ஈடாகாது. வேனில் அனைவரோடும் அவள் பாடி மகிழ்ந்து சென்றது மட்டுமல்ல, அந்த முகாமில் அவள் தன் வாழ்வை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தாள்.

இப்போது பல வருடங்களுக்கு பிறகு லட்சுமி குறித்து விசாரித்த போது கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வசனத்தின்படி அவளை குடும்ப மற்றும் உலக ஆசீர்வாதங்களாலும் ஆண்டவர் ஆசீர்வதித்து, ஒரு பக்தியுள்ள சந்ததியை உருவாக்க அவள் தெரிந்தெடுக்கப்பட்டதை நினைத்து ஆண்டவரை மகிமைப்படுத்தினேன். நான் கொடுத்தது கொஞ்சம்; ஆனால் அதன் விளைவு என் நினைவுகளையெல்லாம் மிஞ்சிவிட்டது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக. **கொடுப்பதில்தான் எத்தனை இன்பம்!**

## ஆலயத்துக்குப் பரிசு

அழகிய ஒரு பட்டணம். அங்கே நேர்த்தியான ஒரு ஆலயம். அநேக ஆண்டுகளுக்குப்பின் ஆலயம் பழமையானதால் பழுதாகிவிட்டது. இந்நிலையில் இள வயது போதகர் தன் மனைவியுடன் இந்த ஆலயத்தின் பொறுப்பேற்கிறார். டிசம்பர் மாதம் பிறந்துவிட்டதால், போதுமான உதவி இல்லாவிட்டாலும் தாங்களே அதை பழுதுபார்க்கத் திட்டமிட்டனர். டிசம்பர் 15க்கு மேல் மழை துவங்கியது. அழகிய ஆனால் பழைய ஆலயம், எனவே அதிகம்

சேதமடைந்திருந்தது. அப்படிப்பட்ட பகுதிகளை சரிசெய்து முடிவடையும் தருவாயில் புயலோடு கூடிய மழை பெய்ததால் பலிபீடத்தின் பின்புறச் சுவர் இடிந்து ஒரு பெரிய வட்டமான துவாரம் விழுந்தது. இன்னும் இரண்டு நாட்களில் கிறிஸ்துமஸ். பாஸ்டர் தலையிலேயே இடி விழுந்ததுபோல உட்கார்ந்துவிட, அவருடைய மனைவி அழத்துவங்கினார், ஏனெனில் அடுத்தநாள் மாலை கிறிஸ்துமஸ் ஆயத்த ஆராதனை (Christmas Eve Worship) நடத்த வேண்டும்.

மாலையில் வீட்டிற்குப் புறப்படும்போது திரும்பவும் மழை பெய்யத் துவங்கியது. அருகிலிருந்த பேருந்து நிறுத்தத்தில் ஒரு வயோதிபப் பெண்மணி குளிரில் நடுங்கிக்கொண்டு நின்றார்கள். பாஸ்டர் சென்று அவர்களை ஆலயத்திற்கு அழைத்துக் கொண்டுவந்து அமரச் செய்தார். மழை நின்றபோது, போகும் வழியில் அம்மையாரை வீட்டில் இறக்கிவிட்டுச் செல்லத் தீர்மானித்தனர். அந்த பெண்மணி இவர்கள் இருவரையும் வீட்டிற்குள் அழைத்து அவர்களுக்கு தேநீர் கொடுத்து அன்பு செய்தபின் அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது அவர்களது கரத்தில் **'இது உங்களது ஆலயத்திற்கு எனது கிறிஸ்துமஸ் பரிசு,'** என பொட்டலம் ஒன்றைக் கொடுத்தார்.

ஆவலோடு திறந்து பார்த்தபோது 15 அடி நீளத்தில் 10 அடி அகலத்தில் பொன்னிறமும் தந்தநிற கலவையான பின்னல் வேலைப்பாடுகளோடுள்ள கண்ணைப் பறிக்கும் அழகான மேஜை விரிப்பு. என்னுடைய கணவர் ப்ரஸ்ஸிலில் (Brussels) இருந்து வாங்கி வந்தது. ஒருமுறை பேராயர் எங்கள் வீட்டிற்கு வந்தபோது மட்டுமே இதை பயன்படுத்தினோம் என்றவர், தானும் தனது கணவரும் பிரிந்ததற்கு காரணமான கதையைச் சொன்னார். நாசிசம் கூட்டத்தினருக்கும் (Nazism) ஆஸ்திரிய படைக்கும் சண்டை வந்தபோது குடும்பமாக வேறிடம் செல்லத் தீர்மானித்தோம். இருவரும் சேர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படாததால், என்னை மட்டும் என் கணவர் ரயிலில் ஏற்றி அனுப்பிவிட்டார். வீட்டுச் சாமான்களை அனுப்பிவிட்டு நானும் வருகிறேன் என்றவர் திரும்பவரவே இல்லை.

ஒருவேளை அவரை சித்திரவதை முகாமில் தங்கவைத்து, வேதனை தாங்கமுடியாமல் மரித்திருப்பாரோ என்னவோ; நான் அவரை தனியே விட்டிருக்கக் கூடாது, நான் பெரிய தவறு செய்துவிட்டேன், என்று சொல்லிக் கண்ணீர்விட்டார். அவர்களுக்காக வருத்தப்பட்டு ஆறுதல் சொல்லி, ஜெபித்து புறப்பட்ட பாஸ்டர் மறுநாள் காலை ஆலயத்திற்குச் சென்று இந்த மேஜை விரிப்பை சுவரில் ஏற்பட்ட துவாரத்தை மறைத்து பார்த்தபோது மிகவும் கச்சிதமாக மூடியது மட்டுமல்ல, மிகவும் நேர்த்தியாகவுமிருந்தது.





மாலையில் கிறிஸ்துமஸ்-க்கு ஆயத்த ஆராதனை நடந்தது. ஆராதனை முடிந்து எல்லோரும் சென்ற பின்னரும் ஒரு வயது முதிர்ந்த ஆண் மட்டும் அமர்ந்திருந்து பலிபீடத்தையே உற்று பார்த்துக்கொண்டிருந்தார். போதகர் அவரிடம் வந்து, ஐயா, நீங்கள் யார், எதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று விசாரித்தார். அப்போது அந்த பெரியவர் பலிபீடத்தில் தொங்கவிட்டிருந்த துணியை காண்பித்து, ‘அது என் மனைவிக்கு நான் பரிசாகக் கொடுத்த விரிப்பைப்போலவே இருக்கிறது, என்றார். போதகரின் அனுமதியோடு அருகில் சென்று பார்த்தவர், துணியின் ஒரு ஓரத்திலிருந்த தனது மனைவியின் பெயர் குறிப்பைக் காண்பித்து இது உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று கேட்டார். அந்த விவரத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ற போதகர் தன் மனைவியுடன் அந்த ஐயாவையும் காரில் ஏற்றிக்கொண்டு எங்கே போகிறோம் என்று சொல்லாமலேயே முந்தின நாள் மாலை சந்தித்த அம்மையாரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அழைப்பு மணி சப்தம் கேட்டு கதவைத்திறந்த அம்மாவுக்கும் வெளியில் நின்று கொண்டிருந்த ஐயாவுக்கும் பெரிய ஆச்சரியம், அதிசயம். ஒருவரையொருவர் ஆரத் தழுவிக்கொண்டனர். தங்களை மீண்டும் இணைத்த தேவனுக்கு துதி செலுத்தினர். **பாலமாக தங்களை இணைத்த கிறிஸ்துமஸ் பரிசாகிய பலிபீட தொங்குதிரைக்காகவும்,** இந்த அற்புத இணைப்பை மிகவும் சிறப்பாக செய்து முடித்த குருவானவருக்காகவும் நன்றி செலுத்தினர்.

**கொடுப்பதில்தான் எத்தனை சந்தோசம், ஆனந்தம்!**
**கொடுத்துப் பாருங்கள், கோடி இன்பம் பெற்றிடுங்கள்.**

# மிஷனரிக்கு பரிசு

இதை வாசிக்கும் உங்களுக்கு, நானும் தேவனுக்குக் கொடுக்க வேண்டும் எனும் ஆசை உங்கள் இதயமெனும் ஊற்றிலிருந்து பெருக்கெடுக்கும் என நம்புகிறேன். கிறிஸ்துமஸ் பண்டிகையின் நாட்கள் இயேசு கிறிஸ்துவின்

பிறப்பினைக் கொண்டாடும் நாட்கள். பிதாவின் மிக உன்னத பரிசாகிய மேசியாவைப் பெற்றிருக்கும் நாம் சக மனிதரோடும்; விசேஷமாக காணாமற் போன ஆடுகளைத்தேடி பணித்தளம் சென்றிருக்கும் மிஷனரிகளுக்கு அன்பின் வெகுமதி கொடுக்கும் காலம். கடந்த ஆண்டுகளிலும் கொடுத்தீர்கள்; இந்த வருடமும் கொடுங்கள்; ஆயுள் நாளெல்லாம், சந்ததி சந்ததியாகத் தலைமுறைதோறும் கொடுங்கள்! பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் கொடுப்பதுவே இன்பம். அதுவே வேதம் கற்பிக்கும் பாடம் (அப்.20:35). **கொடுப்பதில்தான் எத்தனை இன்பம்!**



– அருட்திரு. **இரா. ஜான் கிருபாகரன்**

# தந்தை பேராயர் எஸ்றா சற்குணம்

**1938 - 2024**

## யார் இவர்?



பண்ணைவிளை எனும் மண்ணில் பிறந்த மாணிக்கம். கருவில் சுமந்தவர்: திருமதி தங்க மேரி; தோளில் சுமந்தவர்: திரு மனுவேல். எஸ்றா என்றால் எபிரேய மொழியில் உதவி செய்பவன் என்று அர்த்தம். பனை மரத்தில் ஏறி விளையா டிய தருணத்தில் பரம அழைப்பினைப் பெற்றவர். **முதலாவது தேவன், இரண்டாவது மற்றவர், மூன்றாவது நான்** எனும் கோட்பாடு கொண்டவர். இல்லத்தரசி: காலஞ் சென்ற திருமதி மங்களம். பிள்ளைகள்: பேராயர் கதிரொளி மாணிக்கம், திருமதி மதியொளி பிரின்ஸ்; பேரப்பிள்ளைகள்: சுவாதி, சுருதி, ரேச்சல், ஹனா.

## குணாதிசயம்

முகம் மலர்ந்து சிரிப்பவர்; மற்றவரை மகிழ்விக்க நகைச்சுவையாக பேசுபவர்; எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்ற அப்போஸ்தலன் பவுலின் பரிந் துரையை பயிற்சித்தவர்; என்னை பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவால் எல்லா வற்றையும் சாதித்து முடிப்பேன் எனும் நெஞ்சுரம் கொண்டவர்; ஆன்மீகம் – அரசியல் இரண்டிற்கும் அளவுகோள்வைத்து பாலம் அமைத்தவர். ஏழைகள்,

ஒடுக்கப்பட்டோர் மேல் மனதுருக்கம் கொண்ட இவர், தனது பிறந்த நாளை ஒடுக்கப்பட்டோர் தினமாக அனுசரித்து பல்லாயிரங்களுக்கு உதவிகள் பல செய்தவர்; உபகரணங்கள் தந்தவர்.

## சாதனைச் சரித்திரம்

இந்திய சுவிசேஷ திருச்சபை எனும் சகாப்தத்தில் முதலாம் சபையை 1957-58ல் சென்னை மாநகரத்தின் போரூரில் உருவாக்கி, இன்றைக்கு (2024) பத்தாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு) திருச்சபை; ஒரு பிரதம பேராயர், பதினோரு பேராயர்கள், பதினோரு வேதாகமக் கல்லூரிகள், 20 பள்ளிக்கூடங்கள். தனது மூத்தமகள் கதிரொளி மாணிக்கத்தை சென்னை பேராயராகக் கண்டவர்.

## அரசின் அங்கீகாரம்

முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் புரட்சிப் பேராயர் என அழைக்கப்பட்டவர். தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர்; இரயில்வே துறையின் ஆள்சேர்ப்பு ஆணையத்தின் தலைவர்; பாரதிதாசன் பல்கலை ஆட்சிப்பேரவைத் தலைவர். அன்னாரது அடக்க ஆராதனை தமிழக அரசின் மரியாதையுடன் நடந்து முடிந்தது.

இப்படிப்பட்ட மாமனிதரின் மறைவு இந்திய திருச்சபைக்கும், குறிப்பாக இந்திய சுவிசேஷ திருச்சபைக்கும் பெரியதோர் இழப்புதான். என்றபோதிலும் அவர்கள் விட்டுச்சென்ற அடிச்சுவடுகள் காலத்தால் அழியாது, ஏனெனில் பல்லாயிரம் விசுவாசிகள், ஆயிரக்கணக்கான ஊழியர்கள், இளைஞர்கள் என உதயமாகியிருக்கும் வழித்தோன்றல்கள் அன்னாரின் ஒருகோடி ஆத்து மாக்கள், ஒரு லட்சம் திருச்சபைகள் எனும் இலட்சிய தரிசனம் நோக்கி பயணித்திட வாழ்த்துகிறோம்! ஊக்கத்துடன் ஜெபிக்கிறோம்!

**இரா. ஜான் கிருபாகரன்**

மற்றும் அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள் எனும் மிஷனரிக் குடும்பம்.



# தஞ்சையில்...

# மிஷனரி அர்ப்பணிப்பு ஆராதனை!





சோழநாடு சோறுடைத்து என்று கவிஞர்கள் போற்றுவர். பரிசுத்தவான்கள் கால் பதித்த தஞ்சை பூமிக்கு பல பெருமைகள் உண்டு. அதில் இன்னொரு மைல்கல் ஜூலை 14-ம் நாள். அன்று பரி. பேதுருவின் ஆலயத்தின் இரண்டாம் ஆராதனையில் நமது மிஷனரிகள் பிரான்சிஸ் மற்றும் ஷியாம் கிஷோர் (உத்தரப்பிரதேசம்) ஆகியோர் தஞ்சாவூர் ஜெபக்குழுவின் சார்பாக அர்ப்பணிப்பு செய்யப்பட்டார்கள். இந்த பரிசுத்த உடன்படிக்கையை மிகவும் நேர்த்தியாக நடத்திக் கொடுத்த தலைமைப் போதகர் **அருட்திரு. பால் இரத்தினம்** மற்றும் உதவிப் போதகர் **அருட்திரு. ஜெபராஜ்** அவர்களுக்கும் “அனைவருக்கும் கிறிஸ்து ஊழியர்களின்” சார்பில் உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் சபையின் செயலர் **திரு. ஜெயசீலன்,** நிதிக்காவலர் **திரு. மைக்கேல் மகேஷ்** மற்றும் மாநகரத்தின் ஜெபக்குழுத் தலைவர்களாக இந்த சரித்திர நிகழ்வுக்கு முன்னின்று அனைத்து ஆயத்தங்களையும் செய்த **திருமதி. மல்லிகா துரைபாண்டியன், திருமதி. ஷீபா சாம்சன்** குடும்பத்தாருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- தலைவர் & நிர்வாக இயக்குநர்**



# மன அதிர்வுகள்

**அன்புள்ள புதிய பரிமாண வாசகர்களே!**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், எங்களது Advance கிறிஸ்துமஸ் வாழ்த்துதல்களை வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியா ஒரு பன்முக சமுதாயக் கட்டமைப்பைக்கொண்டு அனைவரும் ஒற்றுமையாக வாழவழிவகுக்கும் உரிமையையும் பெருமையையுமுடைய அரசியல் சாசனத்தைக் கொண்டு இயங்கி வரும் ஜனநாயக நாடு. இதன் குடிமக்களாக இருக்க நாமெல்லோரும் பெருமை கொள்கின்றோமல்லவா? ஆனால் சமீப காலத்தைய அரசியல் நிகழ்வுகளும் மதஎதிர்ப்புக்கள் மற்றும் துன்புறுத்தல்களும், சமுதாய நல்லிணக்கத்திற்கும் மதச்சார்பின்மைக்கும் குந்தகம் வந்துவிடுமோ என்று நம்மை சிந்திக்க வைக்கின்றது அல்லவா? எங்கு பார்த்தாலும் கிறிஸ்தவர்களுக்கெதிராகவும் மிஷனரிகள் மற்றும் போதகர்களுக்கெதிராகவும், எதிர்ப்புக்களும் துன்புறுத்தல்களும் தொடர்ந்துகொண்டே இருக்கிறதைப் பார்த்தால், இதன் பின்னே நிச்சயம் பல அமைப்புகளும் அரசியல் நோக்கங்களும் இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதிலிருந்து விடுபட, நம்மவர்களை விடுவிக்க ஒரே வழி ஜெபமே. “சிறுமைபட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர் நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர். கர்த்தாவே உம்மை தேடுகிறவர்களை நீர் கை விடுகிறதில்லை ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்” (சங்:9:9-10). தாவீதைப்போல மனங்கசந்து அழுது ஜெபிப்போம், மனம் மகிழ இறைவனின் செயலை எதிர்பார்ப்போம்.

## மறைந்து வரும் மத நல்லிணக்கமும் சுவிசேஷ ஊழிய முயற்சிகளும்

இந்துக்கள் முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்று நம் நாட்டில் வாழும் மூன்று முக்கியப்பிரிவினரும் சமுதாய ரீதியில் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மத ரீதியில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்து வந்த காலங்கள் போய், தற்பெருமையும், தன்னலமும், தன்னிச்சையும் சமுதாயத்திலும் மதச் செயல்பாடுகளிலும் தலைவிரித்தாடுகிறதை எங்கும் கண்கூடாக பார்க்கமுடிகிறது. மதவாதிகளின் தந்திரங்களுக்கு அடிமைப்பட்டு நல்லோர்களும் தனது மனிதத்தன்மையை இழந்து மற்றவர்களைத் துன்புறுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றனர். உத்திரப்பிரதேசத்தில் இது வெளிப்படையாகவே நடைபெறுகிறது.

நமது மிஷனரிகளில் ஒருவராகிய திரு. உபேந்திர குமார் அவர்களை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் துண்டுப்பிரதிகள் கொடுத்துக்கொண்டிருக்கும்போது கைது செய்து சிறைச்சாலையில் அடைக்குமளவுக்கு பொய் சாட்சிகளை

உருவாக்கினதுமல்லாமல் நாம் நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு ஜோடிக்கப்பட்ட புகார்கள் அவர் மீது சுமத்தப்பட்டு எப்படியெல்லாம் பயமுறுத்தமுடியுமோ அப்படியெல்லாம் பயமுறுத்தப்பட்டு வருகிறார். அவர் மீது 399 பக்கங்களுக்கு ஜோடிக்கப்பட்ட புகார் மனு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஜெபியுங்கள். உத்திப்பிரதேசத்தில் மட்டும் கடந்த 3 வருடங்களில் மத மாற்றத்தடைசட்டத்தின் கீழ் 835 புகார்கள் பதிவு செய்யப்பட்டு, 1682 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் இன்னும் சிறையில் தங்களது ஜாமீனுக்காக காத்திருக்கின்றனர். இந்த நிலை அடியோடு மாறவும் சுவிசேஷம் எங்கும் தங்கு தடையின்றி பரம்பவும் கர்த்தர் அதிசயங்களைச் செய்யும்படி தொடர்ந்து ஊக்கமாக ஜெபிப்போம்.



மிஷனரி திரு. உபேந்திர குமார் குடும்பம்

## சுவிசேஷப்பணி செய்யமுடியாத காலங்களும் செல்லமுடியாத இடங்களும்

எதிர்ப்புக்களினாலும் துன்புறுத்துதல்களினாலும் சுவிசேஷம் தடைபடுவதைவிட பிரயாண வசதிகளும் சாலைகளுமில்லாத பல கிராமங்களுக்கு சுவிசேஷகர்கள் சென்றடைய முடியாததும் சுவிசேஷத்திற்கு ஒரு பெருந்தடையாக இருக்கின்றது. காடுகளிலும் மலைகளிலும் சாலைகளில்லாது, இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் கால் நடையாக ஒற்றையடி பாதையில்தான் நடந்து சென்று மக்களை சந்திக்கமுடியும் என்ற நிலைமையால் எத்தனையோ கிராமங்களுக்கு இன்னும் சுவிசேஷம் சென்றடையாமலேயே இருக்கின்றது. இப்படிப்பட்ட செயற்கை மற்றும் இயற்கை தடைகளையும் நம்பிக்கையுடன் கடந்து நமது மிஷனரிகள் சுவிசேஷத்தை சுமந்து செல்வது மனதுக்கு மகிழ்ச்சியையும் பெரிய நம்பிக்கையையும் தருவதுடன் “Reaching the Lost till the last” என்ற நமது இதயத்துடிப்புக்கு நேராக நமது சுவிசேஷப்பணி சென்றுகொண்டிருப்பதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். சுவிசேஷப் பணிக்கு அரசியல் மற்றும்



ஜுல்வாணியா மலைக் கிராமத்திற்கு செல்லும் ஏற்றமிறக்கமுடன் கரடு முரடான ஒற்றையடி பாதை

மலைமேலுள்ள ஜுன்வாணியா கிராமத்தில் நமது விசுவாசிகளுடன் நமது இயக்க தலைவர்கள்



மத ரீதியான தடைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. மதமாற்ற தடைச்சட்டத்தின் தண்டனைகள் 3 வருடச் சிறையும், 50,000 ரூபாயும் என்றிருந்தது கடுமையாக்கப்பட்டு, 10 லட்ச ருபாயும் ஆயுள் சிறை தண்டனையும் என்று உத்திர பிரதேசத்தில் கடுமையாக்கப்பட்டு, பயத்தின் மேல் பயத்தையும், திகிலின் மேல் திகிலையும் இந்தியா முழுவதிலும் உருவாக்க மதவாத சக்திகள் அனைவரும் இணைந்து முயலுகின்றனர். வசந்த காலம் மறையுமுன் தேவராஜ்ஜிய பணிக்காக விரைந்து செயல்படுவோம்.

## தேவ இராஜ்ஜியத்தின் விரிவாக்கம்



உத்திர பிரதேசத்திலுள்ள சுடியா கிராமத்தில் வைத்து நடத்தபடும் புது மிஷனரிகளுக்கான நேர்காணல்

சுவிசேஷகர்களால் சுவிசேஷம் சொல்ல முடியாத காலச்சூழ்நிலையில் நாம் வாழ்ந்துவருகிறோம். வட இந்தியாவில் எங்கு பார்த்தாலும் முதியவர்கள் வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியிலும் கிறிஸ்துவின் தேவத் தன்மைக்கு விரோதமாகவும் கிறிஸ்தவத்திற்கும் கிறிஸ்தவர்களுக்கும் விரோதமாகவும் பொய்யான பரப்புரைகளை கட்டவிழ்த்து விடுகின்றனர். இயேசுவால் அடைந்த நன்மைகளைச் சொல்லவிரும்பும் சொந்தங்களையே விரோதங்களாக மாற்றுகின்ற அளவுக்கு மதவாத விஷமிகள் வேலை செய்கின்றனர். இவர்களது சதியை முறியடித்து, கிறிஸ்தவர்களும் சுவிசேஷகர்களும் இயேசுவின் அன்பை கொடுப்பவர்களேயன்றி தீமையை அல்ல என்ற மனநிலையைப் உருவாக்க நமது பேச்சும் செயலும் ஒன்றாய் இருக்கவும், நாம் ஒவ்வொருவரும் அதற்கு மாதிரியாக திகழவும் இதை வாசிக்கின்ற நமக்கும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் தேவன் கிருபை செய்வாராக! சுவிசேஷப்பணிக்காக அர்ப்பணிப்புடனும் ஆர்வமுடனும் பல படித்த வாலிபர்களும் பெரியவர்களும் வடஇந்தியப் பணிதளங்களில் முன்னுக்கு வருவது இந்தியா சந்திக்கபடவேண்டும் என்று சுவிசேஷப்பணிச் செய்து வரும் நமக்கும் மற்ற சுவிசேஷ இயக்கங்களுக்கும் ஒரு பெரிய நம்பிக்கையை உருவாக்குகின்றது. ஆனால் அதற்கான பொருளாதார உதவிகள் வளர்ந்த திருச்சபைகளிலிருந்து கொடுக்கவும், அனுமதிக்கவும் சுவிசேஷ ஊழியத்தேவைகளுக்காக ஆலயக் கதவுகள் திறக்கப்படவும் வேண்டி திருச்சபைகளின் சொந்தக்காரராகிய நமது கர்த்தரிடத்தில் மன்றாடுவோம்.

## வீட்டுத் திருச்சபைகளும் வீட்டு ஜெபக்கூடுகைகளும்



வீட்டு ஆராதனையின் மூலம் இயேசுவை ஆராதித்து வரும் ஒரு பஞ்சாபி குடும்பம்

திருச்சபைக்கான கட்டிடங்கள் கட்ட அனுமதி தராத நிலையில் நமது விசுவாசிகள் வீட்டுத்திண்ணைகளில் கூடி ஞாயிறு ஆராதனைகள் நடத்திவந்தனர், இதற்கும்

தடைவந்தபடியால் விசுவாசிகள் வீட்டுத்திருச்சபை என்று சொல்லி சில குடும்பங்களாக இணைந்து மிகச்சிறு குழுக்களாக கர்த்தரை தொழுது வந்தனர். அதற்கும் அச்சுறுத்தல்கள் வந்தபடியால் வீட்டு ஆராதனை அதாவது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே கூடி ஞாயிறு அல்லது வசதியான ஒருநாளில் வாரத்திற்கொரு முறை தங்களுக்கு இரட்சிப்பின் மகிழ்ச்சியைக் கொடுத்த தேவனை ஆராதிக்கின்றனர். இப்படி ஓடி ஒளிந்து ஆராதிக்கும் நிலையிலிருந்து எப்போதுதான் விடிவு காலம் பிறக்கும்? முழு சுதந்தரத்துடன் எவரும் அறிய, எவரும் பார்க்க நமது ஆண்டவரை தொழக்கூடிய காலம் நமக்கு எப்போது மலர்ந்திடும்? விடுதலையின் நாயகனிடத்தில் வேண்டுதல் செய்வோம்.

## நமது பணித்தளங்களில் தேவனுடைய கூடாரங்கள்

சபை கட்டிடங்களும் ஜெபக்கூடங்களும் கட்டி நல்ல பரிசுத்தமான, மனரம்மிய மானச் சூழ்நிலையில் நமது ஆண்டவரை ஆராதிக்ககூடிய காலங்கள் சிறிது சிறிதாக மறைந்து இனி வட இந்தியாவில் சபை கட்டிடங்களோ ஜெபக்கூடங்களோ கட்ட முடியுமோ என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. காரணம் உத்திரப் பிரதேசத்தில் மதமாற்ற தடைச் சட்டத்தோடு நில மாற்ற தடைச் சட்டமும் கொண்டு வர யோசிக்கப்படுகிறதாம். இப்போது இருக்கின்ற சபை கட்டிடங்கள் மற்றும் மனைகள் பதிவுசெய்யப்பட்டு இதற்கு பின் ஆலயம் கட்டுவதற்கு சபைக்காக இடம் வாங்குவதற்கு அனுமதி மறுப்பதின் மூலம் திருச்சபைகளின் வளர்ச்சியை கட்டுப் படுத்தவும், உத்திரப்பிரதேசத்தில் இதை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெற்றால் மற்ற மாநிலங்களிலும் இந்த சட்டத்திருத்தத்தை கொண்டு வரவும் பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றதாம். இந்த முயற்சியை தேவன் அகித்தோப்பேலின் ஆலோசனையாக்கி நமக்கே சாதகமாக்கித் தர தொடர்ந்து ஜெபிப்போம்


ராஜஸ்தானிலுள்ள சல்தரி கிராம ஆலயம்.


M.P-யில் காப்ரி கிராமத்தில் சபை கட்ட, பூமி அர்ப்பணிப்பு


ஜுன்வாணியா கிராமத்தில் கட்டப்படுகின்ற ஆலயப்பணி



ஞாயிறு தோறும் கூடி ஆராதிக்கும் நமது போக்ஷா விசுவாசிகளில் சிலர். Operation Agape Ebenezer Prayar house வளாகம்



உத்தராகண்ட் சோகி கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு Free tuition class நடத்துவதற்கு தங்களது பள்ளிக்கூட வளாகத்தை தந்து உவிவரும் கிறிஸ்தவ பள்ளிக்கூடம்

## பணித்தளங்களில் இணைந்து செயல்படுவதினால் சுவிசேஷ புரட்சியும் வளர்ச்சியும்

இந்திய சுவிசேஷ இயக்கங்களின் செயல்பாடுகளிலுள்ள ஒரே ஒரு குறைபாடு பணித் தளங்களில்கூட நாம் இணைந்து செயல்படாததுதான். இதற்காக நானும் நாமும் வெட்கப்படவேண்டும். இந்திய சுவிசேஷ சங்கங்கள் இணைந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து கைகோர்த்து நின்றிருந்தால் சுவிசேஷம் இன்னும் எத்தனையோ மைல்களை கடந்திருக்கும். உத்திராகாண்டில் போக்ஷா இன மக்கள் அவர்கள் கிராமத்திலேயே கூடி ஆராதிக்க பல தடைகளும் துன்புறுத்துதல்களும் அச்சுறுத் தலும் தொடர்ந்ததால் பல நாட்கள் ஆண்டவரை ஆராதிக்கமுடியாமல் தவித்தனர். இந்நிலையில் Operation Agape என்ற இயக்கத்தின் முலம் கட்டப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஒரு திருச்சபை முன்வந்து, போக்ஷா மக்கள் ஞாயிறு மற்றும் வார நாட்களில் சாயங்கால வேளையில் ஆராதனை மற்றும் ஜெபக்கூட்டங்கள் நடத்த அனுமதி கொடுத்ததின் மூலம் பாதுகாப்பாக போக்ஷா மக்கள் ஆராதிப்ப தோடு புதியவர்களையும் தைரியமாக ஜெபத்திற்காகவும் ஆராதனைக்காகவும் அழைத்து வருகின்றனர். இது போக்ஷா மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையையும் திருச்சபை வளர்ச்சிக்கு உற்சாகத்தையும் தந்திருக்கிறது. இப்படி இந்தியா முழுவதி லும் வளர்ந்த திருச்சபைகள் வளர விரும்புகின்ற புதிய திருச்சபைகளுக்கு தன்னல மின்றி மற்று இயேசுவை முன்னிறுத்தி உதவ முன் வந்தால் சுவிசேஷ ஊழியமும் சபைகளை உருவாக்கும் பணிகளும் இன்னும் எவ்வளவோ துரிதமாய் பெரு கிடும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை. எபேசியர் 4-ஆம் அதிகாரம் 4,5,6-ஆம் வசனங்களை நமக்குள்ளேயும் நமது இயக்கங்களுக்குள்ளேயும் உண்மை யாக செயல்படுத்த இன்னும் எத்தனை காலம் காத்திருக்கவேண்டும்? இன்றே செயல்படுவோம்! இணைவோம் கர்த்தரின் இராஜ்ஜிய மேன்மைக்காக! தோள் கொடுப்போம் கர்த்தரின் தோழர்களுக்காக!

## சீஷத்துவ உடன்படிக்கை

கடந்த ஐந்து மாதங்கள் நமது பணித்தளங்களிலுள்ள திருச்சபைகளுக்கு மிக மிக கனி அருளும் மாதமாக இருந்தது. திருமுழுக்கு ஒரு கொலைபாதக குற்றமாகவே கருதப்படுவதோடு அதற்கென கடுமையான தண்டனைகளையும் நிறைவேற்றக்

காத்திருக்கும் இந்த பொல்லாத காலக் கட்டத்திலும் நமது விசுவாசிகள் 2024ம் வருடத்தில் மட்டும் 514 பேர் தைரியமாக முன் வந்து திருமுழுக்குப் பெற்றது அதிசயத்திலும் அதிசயமே. குறிப்பாக இவர்களில் அநேகர் உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் உத்திராகாண்டைச் சேர்ந்தவர்கள். இவர்களின் மன தைரியம் மற்றும் சாட்சியின் வாழ்வுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.




நதிகளிலும், குளங்களிலும் தண்ணீர் தொட்டிகளிலும் சாரை சாரையாக கர்த்தரே தெய்வம் என்று சாட்சி பகர்ந்து, அதன் அச்சாரமாக திருமுழுக்கு உடன்படிக்கை செய்யும் விசுவாசிகளின் கூட்டத்திற்காகவும் அவர்களைத் தடை செய்ய எந்த சக்தியாலும் முடியாத மதச்சுதந்திரத்திற்காகவும் மன்றாடி ஜெபிப்போம்.




## கல்வி உதவிப் பணிகளும் சுவிசேஷமும்




சமுதாய முன்னேற்றப்பணிகளை அன்போடும் ஆர்வத்தோடும் அணுகிய காலம் கடந்து ஒருவித தயக்கத்துடனும் சந்தேகத்துடனும் எதிர்கொள்ளும் காலக்கட்டத்தில் நாம் பயணிக்கிறோம். எதற்கெடுத்தாலும் சந்தேகப் பார்வையும் மதமாற்ற சாயமும் பூசுகின்ற நிலையைப் பார்க்கின்றோமே!. ஆனால் இவைகளையும் அதனால் உருவாகும் தொந்தரவுகளையும் பொருட்படுத்தாது நமது மிஷனரிகள் 59 இடங்களில் கல்வி உதவிமையங்களையும் 7 இடங்களில் தையல் மற்றும் கணினி பயிற்சி மையங்களையும் நடத்திவருகின்றனர். 2000-த்திற்கு அதிகமான ஏழை பிள்ளைகளும் 100-க்கு அதிகமான வாலிபப் பிள்ளைகளும் இந்த சமுதாயப் மறுமலர்ச்சி திட்டங்களால் பயனடைகின்றனர். இன்னும் பல இடங்களில் தொழில் கல்வி பயிற்சி மையங்கள் துவங்கப்படவேண்டும். படித்திருந்தும் வேலையில்லாமல் சுற்றித்திரியும் பல இளைஞர்களுக்கும் தொழில் கல்வி சொல்லிக் கொடுத்து சமுதாயத்தில் பலரை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்க முயற்சிக்கும் நமது நோக்கத்தில் வெற்றியடைய தொடர்ந்து ஜெபிப்போம்! உதவுவோம்!

**மறைதிரு. ஆர். டி. ஜெயப்பால்**
நிர்வாக இயக்குநர்



# அழகிய பாதங்கள்

என் பெயர் ஷியாம் கிஷோர், நான் உத்தர பிரதேசத்தின் அலித்தப்பூரில் ஒரு பக்தியுள்ள இந்து குடும்பத்தில் பிறந்து, பாரம்பரிய கிராமப்புற வாழ்க்கையில் வளர்க்கப்பட்டேன். எனக்கு மூன்று சகோதரிகளும், இரண்டு சகோதரர்களும் உண்டு. எனது தந்தை ஒரு ஏழை விவசாயி. எனவே, நாங்கள் வறுமையில் வாழ்ந்து, பல சவால்களை எதிர்கொண்டோம். மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்த எங்கள் குடும்பத்தில், என் சகோதரர் ராம் சாகரின் மர்மமான நோய் சூறாவளியாய் எங்கள் குடும்பத்தில் நுழைந்தது.

2009 ஆம் ஆண்டில், எங்கள் குடும்பத்திற்கு எதிராக செய்யப்பட்ட மாந்திரீகத்தால் எனது சகோதரர் ராம் சாகர் ஒரு அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டார். அவர் இரவுதோறும் தன் தலையை சுவரில் மோதி தன்னை வேதனைப் படுத்திக் கொள்வார். இவனைக் கண்டதும் மக்கள் தப்பி ஓடுவார்கள். நாங்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம், ஆனால் மருத்துவர்களால் அவரை குணப்படுத்த முடியவில்லை. ஒரு மந்திரவாதி தனக்கு கோயில் கட்ட 4000 செங்கல் கேட்டான். இப்படி மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்றோம். அது எங்கள் குடும்பத்தில் பணம் மற்றும் பல்வேறு நெருக்கடியைக் கொண்டுவந்தது. இச் சூழ்நிலையை அறிந்த ஒரு விசுவாசி "நீங்கள் அவரை லக்னோவில் உள்ள ஒரு ஆலயத்திற்கு அழைத்து சென்றால் அவர் குணமடைய வாய்ப்பு உள்ளது" என்று கூறினார்.

எப்படியாவது அவருக்கு நல்ல சுகம் கிடைக்கவேண்டும் என்று, நாங்கள் தவறாமல் தேவாலயத்திற்குச் சென்று வந்தோம். மூன்று மாதங்களில் அவர்

சுகமானார். இதினிமித்தம் எனது விசுவாசம் கிறிஸ்துவில் வேரூன்றத் தொடங்கியது. இத்தருனத்தில் நான் ஒரு புதிய சவாலை எதிர்கொண்டேன். அதாவது நான் ஒருவரிடம் ரூ.10,000/- கடன் வாங்கியிருந்தேன். அவர் நான் உடனடியாக கடனை செலுத்த வேண்டும் அல்லது தேவாலயத்திற்கு செல்வதை நிறுத்த வேண்டும் என்று சொன்னார். நான் முந்தையதைத் தேர்ந்தெடுத்தேன். இரவும் பகலும் கடுமையாக உழைத்து கடனை அடைத்தேன். என்றபோதிலும் தேவாலயத்திற்குச் செல்வதை அவர் தடை செய்தபோது, நான் என் விசுவாசத்தை கைவிடாமல், தொடர்ந்து எனது 16 வயது முதல் 21வது வயது வரை மிகுந்த தாழ்மையுடன் ஆலயத்தை சுத்தம் செய்வது போன்ற சேவை செய்தேன். இந்த நாட்கள் நான் ஆண்டவரில் ஆழமாக வேரூன்ற எனக்கு அதிக உதவியாய் அமைந்தது.

எனது 22வது வயதில் ரேணுதேவியை திருமணம் செய்தேன். அவர் ஒரு இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர். எங்கள் திருமண வாழ்விற்கு பரிசாக மங்கல்ஜித் என்ற அழகான ஆண்மகனை கர்த்தர் எங்களுக்கு கொடுத்தார். மிகவும் வறுமையான சூழ்நிலையில், எனது சொந்த ஊர் அலைத்தாபூர் பகுதியில் தேவ பணியைச் செய்துவந்தேன். எதிர்ப்பு அதிகரித்ததால் நீண்ட நாட்கள் அங்கே சுவிசேஷப் பணியை தொடரமுடியவில்லை; எனவே, நான் குடியிருந்த வீட்டை கிரையத்திற்கு விற்றுவிட்டு, அங்கிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள கைசரிகஞ்ச் என்ற பகுதியில் குடியேறினோம். அங்கு நாங்கள் தங்க ஒரு சிறிய வீடும், ஆராதனை நடத்துவதற்கு ஒரு தற்காலிக கூடாரமும் கட்டினோம். எதிர்ப்பு பெருகியபோதும் ராஜ்பூரில் தொடர்ந்து ஏழு மாதங்கள் சுவிசேஷ ஊழியத்தை செய்துவந்தோம். அவ்விடத்திலிருந்த பாலாஜி என்ற பாபா எங்களை காவல் நிலையத்தில் பிடித்துக் கொடுத்தார். இந்த இடத்தில் "சுவிசேஷ ஊழியம் செய்யக்கூடாது" என்று காவலர்கள் என்னைப் பயமுறுத்தி அனுப்பி வைத்தனர். வேறு வழியின்றி, பீரக்பூர் என்ற இடத்திற்குச் சென்று, அங்கே மூன்று வருட காலம் ஒரு கல் உடைக்கும் பணிபுரிந்து வந்தேன். கொரோனா பெருந்தொற்றின் காரணமாக இரண்டு வருடம் எந்த வேலையும் இல்லை. சம்பாதித்த பணத்தைக்கொண்டு ஆரம்பித்த சபை ஆராதனையையும் கிராமங்களைச் சந்திக்க இயலாத இக்கட்டான சூழலில் இருந்தபோது, என் மனைவியின் கற்பத்தில் உருவான இரண்டாவது குழந்தை இறந்துவிட்டதால், அதை அறுவை சிகிச்சை மூலம் வெளியில் எடுக்கவும் மருத்துவ செலவுக்கும் பணம் இல்லாததால், என் இரு சக்கர வாகனத்தை விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். இதினிமித்தம் கிராம ஊழியத்திற்குச் செல்லமுடியவில்லை. ஆகமொத்தத்தில் எனது விசுவாச, ஊழிய பயணம் இலகுவாயிருக்கவில்லை. மாறாக, பாடுகள், கண்ணீர், முட்கள் நிறைந்த கடினமான பயணமாயிருந்தது. என்றபோதிலும் ஆத்துமாக்களைக் குறித்த கரிசனையினால் தினமும் மாலை 7 முதல் 8 மணிவரை அலைபேசி மூலமாக விசுவாசிகளை இணைத்து ஊழியம் செய்தேன்.

பின் என் நண்பர் ஒருவர் மூலம் "அனைவருக்கும் கிறிஸ்து ஊழியத்தில்" இணைந்து கர்த்தருக்காக பணிசெய்யும்

வாய்ப்பு கிடைத்தது. இப்போது, கைசரி கஞ்ச் என்ற இடத்தில் என் சுவிசேஷ பணியைச் செய்துவருகிறேன்; ஒரு ஞாயிறு ஆராதனை, ஐந்து வாராந்திர கூடுகைகள் நடத்துகிறேன். ஆனால், இந்த பணி மிகுந்த சவாலானதாய் இருக்கிறது. எப்பொழுதெல்லாம் வீட்டில் ஆராதனை நடத்துகிறோமோ, அப்பொழுதெல்லாம் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் தீபுவும்-சரளாவும் பல விதத்தில் எங்களுக்கு தொந்தரவு கொடுக்கின்றனர். ஒலிப்பெருக்கி மூலமாக பாடல்களை சத்தமாக வைப்பது, தவறான செய்தியை பரப்புவது, ஆராதனையை கேலி செய்வது போன்ற காரியங்களால் ஆராதனைக்குக் கூடிவரும் விசுவாசிகளைதொந்தரவுசெய்கிறார்கள். காவலர்களும் அடிக்கடி வந்து எங்களை எச்சரித்துச் செல்கின்றனர். 10 வருட சிறைக் காவலோ, மூன்று லட்சம் பணமோ நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி பயமுறுத்துகின்றனர்.

அக்கம் பக்கத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து வந்த ஐந்து ஊழியர்கள் உட்பட, 40க்கும் அதிகமான ஊழியர்களை அவர்கள் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் யோகியும் தீவிர இந்து பக்தராயிருப்பதால் சுவிசேஷ ஊழியத்திற்கு 100% எதிர்ப்புத் தெரிவிக்கிறார் பஜ்ரங் தல், ஆர்.எஸ்.எஸ். மதவாதிகளிடம் கிறிஸ்தவர்களை அடித்து துன்புறுத்தும்படி கட்டளையிட்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. அவர்கள் எங்களது ஒவ்வொரு நகர்வையும் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அரசின் அச்சுறுத்தல், புறமத பக்தர்கள் மூலம் பாடுகள் என எப்பக்கத்திலும் நாங்கள் நெருக்கப்பட்டாலும் விசுவாசத்தில் உறுதியாக இருக்கிறோம். புதிய அனுகுமுறைகளைக் கடைப்பிடித்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சிறந்த முறையில் செய்வதற்கும், அநேகரை கிறிஸ்துவின் மந்தையில் இணைத்து அவர்களை பரலோக ராஜ்யத்தின் நிச்சயத்தோடு வாழச்செய்யவும் பிரயாசப்படும் எங்களுக்காக மறவாது ஜெபியுங்கள்.

**- ஷியாம் கிஷோர்**
கைசரிகஞ்ச், உத்தரப்பிரதேசம்

## உத்திரப் பிரதேசம்

| | |
|---|---|
| தலைநகர் | : **பிரயாக்ராஜ் (அலகாபாத்)** |
| மக்கள் தொகை | : **24.10 கோடி** (2021) |
| மாவட்டம் | : **71** |
| கிராமம் | : **1,06,774** |
| மொழி | : **ஹிந்தி** |
| கிறிஸ்தவர்கள் | : **0.18%** (2011) |

## ஜெபியுங்கள்

1. நமது ஊழியர்களை ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தி, அற்புத அடையாளங்கள் மூலமாக தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்த.
2. சிறுவர் பயிற்சி வகுப்புகள் அநேக இடங்களில் ஆரம்பிக்கப்பட.
3. மத விரோத சக்திகளால் மிஷனரிகள் எதிர்கொள்ளும் எதிர்ப்புகள் மத்தியிலும் ஆண்டவர் அவர்களை பாதுகாத்து பயன்படுத்த.



# கிறிஸ்து பிறப்பு

(மத்தேயு 1:1-25; 2:1-12; லூக்கா 2:1-55)

## கிறிஸ்து பிறப்பு வெளிப்படுத்தும் தெய்வீக வெளிப்பாடு

### முன்னுரை

தேவனுடைய கிருபையால் மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பு பண்டிகை கொண் டாட ஆயத்தமாகும் யாவரையும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துகிறேன். உலகமெங்குமுள்ள மக்கள் கொண்டாடும் பண்டிகையில் கிறிஸ்துமஸ் மிகவும் உன்னதமானது. ஏனென்றால் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ.1:15) என வேதம் கூறுகிறது. மனித உருவில் உலகில் வெளிப்பட்ட தேவகுமாரன் இயேசுவின் பிறப்பின் சிறப்புகள் என்ன? கிறிஸ்து பிறப்பில் ஏதேனும் தெய்வீக வெளிப்பாடுகள் உண்டா? மனுக்குல அன்றாட வாழ்வுக்கும் அந்த தெய்வீக வெளிப்பாட்டுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? தற்கால திருச் சபைக்கும் அனைத்து உலக ம க்களுக்கும் வெளிப்படும் சமூக, ஆன்மீக செய்தி என்பதை மேற்கூறிய வசன அடிப்படையில் ஆராயலாம்.

*தெய்வீக வெளிப்பாட்டை மூன்று சிறப்பு பகுதியாகக் காணலாம்:*

### 1 "வரலாற்றினூடே வெளிப்பட்ட இயேசு"

இந்த வெளிப்பாடு சரித்திரத்தில் யாரும் மறுக்கமுடியாத உண்மை. வரலாற்று வெளிப்பாட்டை நான்கு விதங்களில் காணலாம்.

**அ) விசுவாச வீரர் வரலாற்றில் வெளிப்பட்டவர் இயேசு** (மத்.1:1,2)

"விசுவாசிகளின் தகப்பன்" என அழைக் கப்படும் "ஆபிரகாம்" உலக தெய்வ நம்பிக்கையில் "கிறிஸ்தவம், இஸ்லாம், யூதமார்க்கம்" ஆகிய மூன்று நம்பிக் கைகள் போற்றும் தகப்பனாக உள்ளார்.

சர்வத்தையும் படைத்த தேவன் தன்னை மோசேக்கு அறிமுகம் செய்யும்போது "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறேன் என்றார்" (யாத்.3:6, 15,16). இதனை இயேசு தனது போதனையிலும் (மத்.22:31) உறுதிப்படுத்துகிறார். மத்தேயு ஆக்கியோன் இயேசுவை அறிமுகம் செய்யும்போது "ஆபிரகாமின் குமாரனாகிய ....இயேசு கிறிஸ்து" என வர்ணிக்கிறார் (மத்.1:1,2).

### ஆ) விதவைகள் வரலாற்றினூடே வெளிப்பட்டவர் இயேசு (மத்.1:3,5,6)

மத்தேயு இயேசுவின் வம்சபட்டியலை வெளியிடும்போது தற்கால சமூகத்தில் நிந்தைக்குள்ளான விதவைகள் பெயரைப் பதிவு செய்து அவர்களைக் கனப்படுத்துகிறார். தேவன் சமூக நிந்தைக்குள்ளானோரையும் புறக்கணியார் என்பது வெளிப்படையாக உள்ளது. தாமார், ரூத் மற்றும் உரியாவின் மனைவி என்ற மூன்று விதவைகளின் வரலாற்றினூடே இயேசு வெளிப்படுகிறார்.

### இ) வல்லரசர் வரலாற்றினூடே வெளிப்பட்டவர் இயேசு

(மத்.1:1,6,7,20).

தெய்வநம்பிக்கையில் விசுவாச வீரர், சமூகவாழ்வில் விதவைகள் வரலாறு தாண்டி அரசியல் பின்னணியில் வல்லரசர் வரலாற்றினூடே வெளிப்பட்ட தேவ குமாரனாக இயேசுவை மத்தேயு அறிமுகம் செய்கிறார். தாவீது, சாலமோன் போன்ற யூதவல்லரசர் வரலாற்றினூடே சீரியா நாட்டின் தேசாதிபதி சிரேனே ஆட்சிகாலத்தில் இயேசு வெளிப்பட்டதாக லூக்கா வரலாற்று பதிவு செய்கிறார் (லூக்கா 2:1-7).

### ஈ) விவாக வாழ்விற்கு அப்பால் வெளிப்பட்ட இயேசு

(மத்.1:18, லூக்.1:27-31, 35)

கறைபடிந்த வரலாற்றினூடே வெளிப்பட்ட தேவன் கறையற்ற கன்னிப்பிறப்பு மூலம் பரிசுத்த தேவகுமாரனாக இயேசு வெளிப்பட்டார். மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்மனிதஉறவுஇல்லாமல்பரிசுத்தமான தேவ குமாரனாக வெளிப்பட்டார் (லூக. 1;35).

## 2 "வாழ்வளிப்பவர் இயேசு"

வரலாற்றில்வெளிப்பட்டதேவன், பாவப் பிடியிலும், பிசாசு மற்றும் தீரா பினியில் அவதியுறும் மனுக்குலத்துக்கு வாழ்வளிக்கும் தேவகுமாரனாக வெளிப்பட்டார்; ஆன்மீக, சமூக, பொருளாதார வாழ்வில் சந்திக்கும் சவால்களுக்குத் தீர்வு வழங்குபவராக வெளிப்பட்டார். இந்த வாழ்வளிக்கும் தன்மையை மூன்று பகுதியாகக் காணலாம்.

### அ) பாவ மன்னிப்பும் மீட்பும்

இயேசு மத்.1:21; யோவான் 1:29 முதல் மனிதர் ஆதாம் ஏவாளுக்குள் பாவத்துக்குள்ளான மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிப்பதை பிரதான இலட்சியமாய்க் கொண்டவர் இயேசு. "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பேரிடுவா

யாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" மத்.1:21. யோவான் தனது நிரூபத்தில்: "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவத்தையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்" 1யோவான் 2:1,2. பாவநிவிர்த்தி அல்லது பாவ மன்னிப்பு பாவ அறிக்கை செய்யும்போது அளிக்கப்படுவதாக 1யோவான் 1:7-9-ல் காண்கிறோம். பாவ மன்னிப்பும் மீட்பும் புது வாழ்வு மற்றும் பரிபூரண ஆசீர்வாதத்தின் ஆரம்பம்.

## ஆ) "பிரசன்னமும் போதித்து நடத்துதலும்"

இம்மானுவேல் மத்.1:23 இயேசுவில் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்றோர் புதுவாழ்வில் வெற்றியோடு தொடர உதவும் வண்ணமாக உள்ளான வாழ்வில் வாசம்பண்ணி அனுதினவாழ்வில் போதித்து, ஆலோசனை வழங்கும் "இம்மானுவேல்) அற்புதமானவர். தெய்வீகஅந்நியோன்யம், சகவாசம்அழைக்கப்படுவோரும் மட்டும் அருளப்படுவதாக வெளி.3:20ல் புலப்படுகிறது. மேலும் யோவான் 14:16,17,23,26ல் இயேசுவின் உலக சரீரவாழ்வுக்குப் பிறகு பிதா அனுப்பும் தூய ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுபவராகவும், போதித்து வசனத்தை நினைப்பூட்டி வழிநடத்துபவராகவும் வர்ணிக்கப்படுகிறார். இந்த "இம்மானுவேல் நமக்குள்ளே வாசம் பண்ணி வழி நடத்த அர்ப்பணிப்போமா!

## இ) பராமரிப்பும் பாதுகாப்பும் - இராஜா (மத்2:2,12)

வாழ்வளிக்கும் தேவன் "இராஜா"வாக வானசாஸ்திரிகளுக்கு வெளிப்படுகிறார் (மத்.2:2). இராஜாவின் பொறுப்பை வெளிப்படுத்தும் வண்ணமாக லூக். 1:32,33,51-53 வசனங்கள் உள்ளது. இயேசு நித்திய ராஜாங்கத்தின் வல்லமையுள்ள இராஜாவாக வெளிப்படுகிறார். அவருடைய ஆட்சியில் அகந்தை அல்லது வெருமையுள்ளவர்களைச் சிதறடிக்கிறார்; ஆட்சி மாற்றம் செய்கிறார்; தாழ்விலிருப்போரை உயர்த்துகிறார்; பசியுள்ளவர்கள் பசிபோக்கி நன்மையினால் நிரப்புகிறார்; பணக்காரரை வெறுமையாக்குகிறார். நீதியான, நேர்மையான, ஏழைகள் / தாழ்விலிருப்போர் மீது கரிசனையுள்ள இராஜாவாக வெளிப்படுகிறார். இந்த இயேசு இராஜாவின் ராஜ் பிரஜைகளாக கிறிஸ்துமஸ் காலத்தில் நம்மைப் புதுப்பித்து அவருடைய ஆளுகையில் நன்மையை ருசிப்போமா!

**ஆட்சி மாற்றம் செய்கிறார்; தாழ்விலிருப்போரை உயர்த்துகிறார்; பசியுள்ளவர்கள் பசிபோக்கி நன்மையினால் நிரப்புகிறார்**

**கிறிஸ்து பிறப்பு விலையேறப்பெற்ற காணிக்கையை கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவின் பணிக்காகப் படைக்க உந்தித் தள்ளுவதாக!**

## 3 " வழிபடக்கூடியவர் இயேசு"

(மத்.2:2,11; லூக்கா 2:16,17,20)

வரலாற்றில் வெளிப்பட்டு வாழ்வளிக்கும் தேவன் வழிபடக்கூடியவராக வெளிப்படுகிறார். அவரைப் பெற்றெடுத்த கன்னிமரியாளை வணங்காமல் சாஸ்திரிகள் குழந்தை இயேசுவை தேவ குமாரனாகப் பார்த்து வணங்கியதைக் காணலாம். வழிப்பாட்டின் மூன்று பகுதிகளைக் கிறிஸ்து பிறப்பு நினைவூட்டுகிறது;.

### அ) பணிதல் (மத்.2:2,11)

வானசாஸ்திரிகள் இயேசுவின் பிறப்பை நட்சத்திரம் மூலம் அறிந்து பிள்ளையைப் "பணிந்துகொள்ள வந்தோம்" என்ற தங்கள் பிரதான நோக்கத்தை ஏரோது ராஜாவிடம் கூறுகின்றனர். பின்பு பிரதான ஆசாரியர், வேதபாரகர் அறிவுரைப் படியும் நட்சத்திரத்தின் வழிநடத்துதலின் படியும் பிள்ளை இயேசுவைக் கண்டு "சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொண்டார்கள்". இயேசுவை மட்டும் சாஷ்டாங்கமாய் பணிய இந்த கிறிஸ்து பிறப்பு ஞாபகப் படுத்துகிறது.

### ஆ) படைத்தல் (மத்.2;11)

இயேசு பாலனைப் பணிந்த சாஸ்திரிகள் சர்வலோக பாவநிவாரனபலியின் அடையாளமாக தூபவர்க்கம், வெள்ளைப்போளம் ஆகிய பொருட்களையும் விலையேறப்பெற்ற பொன்னையும் காணிக்கையாகப் படைத்தார்கள். கிறிஸ்துபிறப்புவிலையேறப்பெற்ற காணிக்கையை கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவின் பணிக்காகப் படைக்க உந்தித் தள்ளுவதாக!

### இ) பிரசித்தப்படுத்துதல்

(லூக்கா 2:16,17,20)

பணிதல், படைத்தல் மட்டும் வழிபாட்டைப் பூரணப்படுத்தாது. பாவம் போக்கி, இரட்சித்து, வாழ்வில் போதித்து, பராமரித்து நித்திய வாழ்வளிக்கும் இயேசுவைப் பிரசித்தப்படுத்துதல் வழிபாட்டில் உன்னதமானது. வயல்வெளியில் தங்கிய மேய்ப்பர்க்கு இயேசுவின் பிறப்பு செய்தி அறிவிக்கப்பட்டபோது பிள்ளையின் பெற்றோரையும் பிள்ளையையும் காண்கிறார்கள். ஆனால் பிள்ளை இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட செய்தியைப் பிரசித்தப் படுத்தினார்கள். தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டு திரும்பினார்கள். இரட்சகர் இயேசுவில் பாவமன்னிப்பு, பரலோக வாழ்வு, பூலோக வாழ்வில் நன்மைகள் உண்டு என்பதைப் பிரசித்தப்படுத்த அர்ப்பணிப்போமாக.

வாசகர் யாவருக்கும் எனது கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

- Rev. N. ஆசீர்வாதம்

# வானத்திலிருந்து
# வாழ்வா? அழிவா?




அசீரியசிறைபிடிப்பின்போதுமற்றஇனங்களோடு கலந்து உருவாகியவர்கள் சமாரியர்கள்! அவர்களும் தங்களின் மத நம்பிக்கைகளை யூதர்களை விட சற்று மாற்றியமைத்துக் கொண்டவர்கள். மேசேயின் முதல் 5 ஆகமங்களை மட்டும் நம்பினர். கெரிசீம் மலையில் ஆண்டவரை ஆராதித்தனர். எனவே, யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையே ஜென்ம பகை. எருசலேம் செல்லவேண்டிய யூதர்கள் நேர்வழியாக சமாரியா வழி சென்றால் 105-110 கி.மீ. தூரம்தான்! ஆனால் சமாரியர்களை சகிக்க முடியாமல் 150-160 கி.மீ. தூரத்தை சுற்றிக் நடந்தார்கள். மறந்துடாதீங்க! அந்தக் காலத்திலே இந்த தூரத்தை நடந்தே தான் கடக்கனும்.

ஆனா, இயேசுகிறிஸ்து இந்த சிக்கல்ல எல்லாம் சிக்காமல் எருசலேம் செல்வதற்கு ஆயத்தமானார். லூக்.9:51-56 வரை அந்த சம்பவத்தை வாசிக்கிறோம். இடத்தை ஆயத்தப்படுத்த சில நபர்களை (தூதர்கள்-தேவ தூதர்கள்னு நினைச்சிடாதீங்க! அது மனிதர்கள்தான்) முன்னாக அனுப்பினார். அவர் எருசலேமுக்கு போறார்ன்னு தெரிஞ்ச சமாரியர்கள் தங்கள் ஊரில் தங்க கூடாதுன்னு தடைபோடுறாங்க! அவ்வளவுதாங்க! நம்ம இடிமுழக்கத்தின் பிள்ளைகள் யோவானுக்கும், யாக்கோபுக்கும் சும்மா ஜிவ்னு கோபம் ஏறிடுச்சு! உங்கள் ஊர் வழியா போனா போகுதுன்னு சமுதாய தடையை உடைச்சிட்டு போகலாம்னு பார்த்தா! இப்ப தங்க கூடாதுன்னு சொல்றீங்க!

இயேசுவே, எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி 'நாங்கள்' கட்டளையிட உமக்குச் சித்தமா? (வ.54). இடிமுழக்கத்தின் பிள்ளைகள் ராக்கு! இயேசு கிறிஸ்துவுக்கு ஷாக்கு! சரி! இந்த எலியா ரெபரன்ஸ்? எங்க, என்ன பண்ணுனாறு? 2 இராஜாக்கள் 1:1-18 வசனங்களை வாசிங்க!

அகசியா ராஜா கிராதி வழியா கீழே விழுந்து வியாதிப்படுக்கையா கிடக்கிறார். பிழைப்போமா? இல்லையா! விடை தெரிய பெலிஸ்திய கடவுளான 'பாகால்சேபூ"

கிட்ட கேட்க ஆள் அனுப்புறார். ஈக்களின் கடவுள். அதான் பாகால் சேபூலோட அர்த்தம். அதுதான் புதிய ஏற்பாட்டில் 'பெயல்செபூல்னு' வடிவம் பெறுகிறது. ஈக்களின் கடவுள். கிட்ட விசாரிக்க போன ஆட்களை நிறுத்தி 'ஏம்பா', இஸ்ரவே லில் கடவுளே இல்லைனு பெலிஸ்திய கடவுள்கிட்ட அதுவும் அசிங்கத்து மேலே யும் சுற்றும் ஈக்கடவுள் கிட்ட கேட்க போங்க! இதுனாலேயே ராஜா பிழைக்க மாட்டார்னு' போய் சொல்லு என்று எலியா வழிமறித்து கூறுகிறார். ராஜா கிட்ட மேட்டர் போக இவ்வளவு தைரியமா பேசுனா நிச்சயம் எலியா தான்னு அங்க அடையாளங்களை வைச்சு உறுதிப் படுத்திட்டாப்ல! உடனே ஒரு இரானுவத் தலைவனையும், 50 போர்வீரர்களை யும் அனுப்பி எலியாவை கூட்டிட்டு வாங்கன்னு அனுப்புறாரு ராஜா. வீரமா போன வீரர்கள் வீராவேசமா போய் 'தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னை வரச் சொல்கிறார்னு சொல்ல, எலியா உடனே 'நான் தேவனுடைய மனுஷனானால் அக்கினி வானத்தி லிருந்து இறங்கி உங்களை அழிக்க கடவதுன்னு சொன்னார். அவ்வளவு தான் 51 பேர் காலி!

இந்த நியூஸ் கேள்விபட்டு ராஜா 2வது டீமை (51 பேர்) அனுப்புறார். அவர் களும் அதே வீராவேச டயலாக் பேச, எலியாவும் அதே டயலாக் பேச அடுத்த 51 பேரும் காலி. மொத்த இழப்பு 102 பேர்.

இந்த நியூஸும் ராஜாகிட்ட போக! திரும்பவும் 51 பேர். ஆனால் இந்த ராணுவத் தலைவன் ரொம்ப உஷார். அதுனால எலியாவை ரொம்ப தாழ்மை யா கூப்பிட்டு, தாஜா பண்ணி கூட்டிட்டு போயிட்டார். மிஷன் சக்ஸஸ்! ஆனா எலியா சொன்ன செய்தி, அகசியா போய்டுவாரு; பேஸன்ட் அவுட்!

இந்த ரெபரன்ஸ்தான் எலியாகிட்ட எடுத்து, இடிமுழக்கத்தின் பிள்ளைகள் இந்த சமாரியா கிராமத்தை சேர்ந்தவர் களை கிரில்டு சிக்கன் மாதிரி, கிரில்டு ஹயுமன் போடலாம்னு கேக்குறாங்க! இயேசு கிறிஸ்து திரும்பி அவர்களைப் பார்த்து, 'நீங்கள் இன்ன ஆவியுள்ள வர்கள் என்பதை அறியீர்கள் என்று அதட்டினார். மனுஷ குமாரன் மனுஷ ருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல; இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்.

எலியா செய்ததைப் பற்றி எந்த கருத்தும் கூறாமல் தான் வந்த நோக்கத்தை தெளிவு படுத்துகிறார். அழிப்பது எளிது! இடிப்பது எளிது! ஆனால் வாழ்வளிப் பது, அதுவும் பூரண வாழ்வளிப்பது? அந்தப் பூரண வாழ்வை நாம் பெற்றுக் கொள்ள தெய்வத்துவத்தின் பரிபூரணம் வாசம் செய்த இயேசு, வானத்தை விட்டு, கன்னி மரியாளின் கருப்பையில் அடைக்கலமாகி, மாட்டுத் தொபவத்தில் பிறந்து மனிதனாய் வாழ்ந்து மரித்து உயிர்த்தெழுந்தார். ஏன்? மனிதனை வாழவைக்க வேண்டும் என்ற அன்பு! வாழ வைப்பதுதான் அன்பு! எப்படி வாழவைப்பது என்று கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கும் இயேசு கிறிஸ்துவின் பாடத்திட்டத்தில் அக்கினியை இறக்கி அழிக்கும் பாடத்தை இணைக்க முயற்சிக்கின்றனர். அதை கிறிஸ்து



எதிர்க்கிறார். இதுதான் இன்றைய திருச் சபைக்கு வரும் செய்தி! ஏற்கனவே உடைந்து, சிதைந்து, உருக்குலைந்து கிடக்கும் இச் சமூகத்தைக் கட்டி, எழுப்பி, வாழ்வளிக்கும் பொறுப்பு சபைக்கு உள்ளது. தலைமைக்கு உள்ளது! பவுல் அதை 2கொரி.13:10-ல் கூறுகிறார். "இடித்துப்போட அல்ல ஊன்றக் கடடவே கர்த்தர் எனக்கு அதிகாரம் கொடுத் தார்". ஊன்றக் கட்டுவதும், வாழ்வளிப் பதும் அந்த மனிதர்களின் வாழ்வில் இணைய வேண்டும். இயேசுவும் அதற்குதான்வானத்தைவிட்டுகீழிறங்கி வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாழ்ந்து வாழ்வளித்தார்.

கணவன்-மனைவி வாழ்ந்த ஒரு வீடு தீக்கிரையாகி கணவனின் முகம் முழுவ தும் பாதிக்கப்பட்டது. மனைவி நல் வாய்ப்பாய் தப்பித்துவிட்டார். கணவ ரின் முகம் சிதைந்ததால் கணவன் வெளி உலகை காண விருப்பமில் லாமல் தன் வாழ்வை ஒரு அறைக்குள் அடைத்துக்கொண்டார். கணவனிடம் எவ்வளவோ பேசியும் 'என் உண்வை உன்னால் புரிய முடியாது' என்று கூறிவிட்டார். முகமாற்று அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவரை வீட்டிற்கு அழைத்துவந்து பல மணி நேரம் உரையாடல் நடைபெற்றது. முகமாற்று அறுவை சிகிச்சையை நிராகரித்து 'என் உணர்வை உங்களால் புரிய முடியாது' என்று கூறிவிட்டார். இரண்டு நாட்கள் கழித்து அந்த மனைவி முகமாற்று அறுவை சிகிச்சை நிவுணரின் மருத் துவமனைக்குச் சென்றாள். அந்த ம ருத்மூவர் அதுதான் எவ்வளவு பேசியும் உங்கள் கணவர் மறுத்துவிட்டாரே, இப்பொழுது என்ன வேணும் என்று கேட்டார். அதற்கு அந்த மனைவி 'ஐயா' நான் என் கணவன் உலகத்திற்குள் சென்று அவருடன் மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறேன். எனவே என் முகத்தை சிதையுங்கள்" என்று கூறினார்.

**தலைவா! வாழ்வளிக்கவே இயேசு வந்தார். இடிக்க அல்ல! ஊன்றக் கட்டவே நமக்கு அதிகாரம்!**




**அருட்திரு.**
**Rev.Dr.S. வாட்சன் செல்வசிங்**
நிர்வாக இயக்குனர்,
சபை வளர்ச்சி மையம், சென்னை-52.

## கிறிஸ்துவுக்குள் பிரிய அருட்பணி பங்காளர்களுக்கு,

இந்த ஊழியத்தின் வளர்ச்சிக்காக ஜெபித்து, கொடுத்து, உழைத்த யாவருக்கும் இதயம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு தோறும் நம்முடைய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. நிதியாண்டு 2023-2024க்கான நமது தணிக்கை விவரங்களை இங்கே பிரசுரித்திருக்கிறோம். படியுங்கள், தேவனை துதியுங்கள், தொடர்ந்து வளர்ந்திட ஜெபியுங்கள். உங்கள் ஆலோசனைகளை தயவுசெய்து தெரிவியுங்கள்.

**திரு. ஆபிரகாம் ஐசக் ராஜ்** (நிதிக்காவலர்)

---

**A. JOHN MORIS & CO.,**
CHARTERED ACCOUNTANTS

### INDEPENDENT AUDITOR'S REPORT TO THE MEMBER'S OF CHRIST FOR ALL MINISTRIES INDIA

We have audited the attached Balance sheet of the **M/s. CHRIST FOR ALL MINISTRIES - INDIA,** as at **31st March 2024**, the Income and Expenditure Account and Receipts and Payments Account for the year ended as on that date annexed thereto. These financial statements are the responsibility is to express an opinion on these financial statements based on our audit.

We have conducted our audit in accordance with the Standards on Auditing (SAs) generally accepted in India. Those standards require that we plan and perform the audit to obtain reasonable assurance about whether the financial statements are free from material misstatement. An audit includes examining, on a test basis, evidence supporting the amounts and disclosures in the financial statements. An audit also includes assessing the accounting principles used and significant estimates made by management, as well as evaluating the overall financial statement presentation. We believe that our audit provides a reasonable basis for our opinion.

**We state that:**

a. We have obtained all the information and explanations which to the best of our knowledge and belief were necessary for the purpose of our audit.

b. In our opinion, the trust has kept proper books of accounts as required by law, so far as it appears from our examination of those books.

c. The Balance Sheet, Income and Expenditure Account and Receipts and Payments Account dealt with by this report are in agreement with the books of account.

A. JOHN MORIS & CO. Chennai-14 Chartered Accountants

No.5, Lakshmipuram 1st Street, Deivasigamani Road (Near Music Academy), Royapettah, Chennai - 600 014.
Tel : +91-44-2811 6003-4 / 2811 1712, 7667034935, E-mail : info@ajohnmoris.com, Website : www.ajohnmoris.com

Branches : Ahmedabad/ Bengaluru/ Bhubaneswar/ Chhattisgarh/ Coimbatore/ Erode/ Hyderabad/ Kochi/ Kolkata/ Kumbakonam/ Lucknow/ Madurai/ Mumbai/ Nagercoil/ Nagpur/ New Delhi/ Ranchi/ Sricity/ Surat/ Thiruvananthapuram/ Thrissur/ Tirunelveli/ Erode/ Tiruppur/ Trichy/ Tuticorin/ Visakhapatnam

d. In our opinion and to the best of our information and according to the explanations given to us, the said Balance Sheet, Income and Expenditure Account and Receipts and Payments Account give a true and fair view in conformity with the accounting principles generally accepted in India: -

1. In the case of the Balance Sheet, of the Statement of Affairs of the trust as at 31st March 2024 and

2. In the case of the Income and Expenditure Account of the Excess of **Income over Expenditure** of the trust for the year ended on that date.

3. In the case of the Statement of Receipts and Payments Account, all the Receipts and Payments of the said trust for the year ended on that date.

**For A JOHN MORIS & CO.,**
Chartered Accountants
FRN 007220 S

A. JOHN MORIS & CO. Chennai-14 Chartered Accountants

**CA. Chittaranjan Soundarapandian**
Partner
M.No.200815
UDIN : 24200815BKLSZB2104

Place: Chennai
Date: 17-07-2024

No.5, Lakshmipuram 1st Street, Deivasigamani Road (Near Music Academy), Royapettah, Chennai - 600 014.
Tel : +91-44-2811 6003-4 / 2811 1712, 7667034935, E-mail : info@ajohnmoris.com, Website : www.ajohnmoris.com

**Branches : Ahmedabad/ Bengaluru/ Bhubaneswar/ Chhattisgarh/ Coimbatore/ Erode/ Hyderabad/ Kochi/ Kolkata/ Kumbakonam/ Lucknow/ Madurai/ Mumbai/ Nagercoil/ Nagpur/ New Delhi/ Ranchi/ Sricity/ Surat/ Thiruvananthapuram/ Thrissur/ Tirunelveli/ Erode/ Tiruppur/ Trichy/ Tuticorin/ Visakhapatnam**

**CHRIST FOR ALL MINISTRIES- INDIA**
Benash Trust Campus, No.18/6. (Room.1)
Narayanan Street, Ayanavaram, Chennai - 600023

**BALANCE SHEET AS AT 31-03-2024**

| LIABILITIES | Amount in Rs | Amount in Rs | ASSETS | Amount in Rs | Amount in Rs |
|---|---|---|---|---|---|
| **Corpus Fund** | | 1,000.00 | **Fixed Assets** | | 43,13,462.00 |
| **General Fund** | | | **Investments** | | |
| Opening Balance | 86,38,555.83 | | Fixed Deposit (Opening Balance) | 28,00,000.00 | |
| Add : Excess of Income over Expenditure | 12,52,371.28 | | Add : Deposit During the year | 40,45,171.00 | |
| | | | Less : Withdraw During the year | 28,00,000.00 | 40,45,171.00 |
| | | 98,90,927.11 | | | |
| **Endowment Fund** | | 5,00,000.00 | **Loans and Advances** | | |
| | | | **(i) Advance (Opening Balance)** | 85,000.00 | |
| | | | Less : Old Rental deposit received during the year | 50,000.00 | |
| | | | | 35,000.00 | |
| | | | Add: Advance given during the year | 6,63,720.00 | |
| | | | Total Advance given during the year | **6,98,720.00** | |
| | | | Less : Advance settled during the year | 6,90,220.00 | |
| | | | | **8,500.00** | |
| | | | Less : Advance Written Off | 1,000.00 | 7,500.00 |
| | | | **(ii) Rental Deposit** | | |
| | | | Rental Deposit during the year | 1,68,000.00 | |
| | | | | | 1,68,000.00 |
| | | | **(iii) Loans (Opening Balance)** | 54,500.00 | |
| | | | Add: Loans given during the year | 2,13,000.00 | |
| | | | Less : Loans Settled during the year | 1,63,500.00 | |
| | | | Less : Loan Write Off | 10,000.00 | 94,000.00 |
| | | | **Current Assets** | | |
| | | | Cash in Hand | 34,305.00 | |
| | | | Cash at Bank | 17,29,489.11 | 17,63,794.11 |
| **Total** | | **1,03,91,927.11** | **Total** | | **1,03,91,927.11** |

**FOR CHRIST FOR ALL MINISTRIES INDIA**

**Abraham Isaac Raj**
Treasurer

**Dr.Daniel**
Secretary

PLACE : CHENNAI
DATE : 17-07-2024

**For A.JOHN MORIS & CO.,**
CHARTERED ACCOUNTANTS
FRN: 007220S

**CA Chittaranjan Soundarapandian**
PARTNER
M.NO: 200815
UDIN : 24200815BKLSZA4940

CHRIST FOR ALL MINISTRIES- INDIA
Benash Trust Campus, No.18/6. (Room.1)
Narayanan Street, Ayanavaram, Chennai - 600023

**INCOME & EXPENDITURE ACCOUNTS FOR THE YEAR ENDED 31-03-2024**

| | EXPENDITURE | Amount in Rs | | INCOME | Amount in Rs |
|---|---|---|---|---|---|
| To | Honorarium field | 14,33,950.00 | By | Sponsorship support | 49,97,923.00 |
| To | Travelling Expenses | 24,423.00 | By | Offering Received | 50,94,656.00 |
| To | Petrol Expenses | 32,289.00 | By | Earmaked fund for Construction | 46,73,090.00 |
| To | Vehicle Maintanence | 1,09,675.00 | By | Earmaked fund for Equipment | 94,800.00 |
| To | Telephone Expenses | 23,040.00 | By | Bank Interest | 1,68,115.00 |
| To | Rent & Amenities | 1,92,000.00 | | | |
| To | Electricity Charges | 28,532.00 | | | |
| To | Printing & Stationary | 2,91,645.00 | | | |
| To | Postage and Telegrams | 72,406.00 | | | |
| To | Office Maintanence | 1,61,485.00 | | | |
| To | Bank Charges | 2,979.72 | | | |
| To | Hospitality | 22,867.00 | | | |
| To | Medical expenses | 61,600.00 | | | |
| To | building maintenance | 3,86,121.00 | | | |
| To | Promotional & Training Exp | 2,75,372.00 | | | |
| To | Field Staff salary | 56,75,550.00 | | | |
| To | Field Petrol Expense | 5,69,291.00 | | | |
| To | Field travel | 2,70,037.00 | | | |
| To | Salary Admin staff | 12,92,784.00 | | | |
| To | Written of Loan & Advances | 11,000.00 | | | |
| To | Child Care | 1,54,305.00 | | | |
| To | Board Meeting | 24,222.00 | | | |
| To | Audit Fee | 17,700.00 | | | |
| To | Field Program Expenses | 26,42,939.00 | | | |
| To | Excess of Income over Expenditure | 12,52,371.28 | | | |
| | Total | **1,50,28,584.00** | | Total | **1,50,28,584.00** |

**FOR CHRIST FOR ALL MINISTRIES INDIA**

**Abraham Isaac Raj**
Treasurer

**Dr.Daniel**
Secretary

Christ for All Ministries-India, No.18/6, Narayana Street, Ayanavaram, Chennai-23.

PLACE : CHENNAI
DATE : 17-07-2024

**For A.JOHN MORIS & CO.,**
CHARTERED ACCOUNTANTS
FRN: 007220S

A. JOHN MORIS & Co. Chennai-1 Chartered Accountants

**CA Chittaranjan Soundarapandian**
PARTNER
M.NO: 200815
UDIN : 24200815BKLSZA4940



இந்திய
தேசத்திற்காக

# மன்றாடுவோம் வாருங்கள்!

**தேவன் நமது பணித்தளங்களில் செய்கிற கிரியைகளை சொல்லி துதிக்கவும், ஜெபிக்கவும் குறிப்புகளைக் கொடுத்துள்ளோம். அனுதினமும் உங்கள் தனி, குழு மற்றும் குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள்!**

## உத்தரகாண்ட்

### 1

ராம் நகர், நைனிதால் மாவட்டம்

ராஜேஷ் மசி & தெரசா

### துதிக்க

- கடந்த மாதம் 148 பேருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவித்ததில் 20 பேர் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஆராதனையில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டுவதற்காக;
- தன் சரீரத்தில் காணப்பட்ட தீராத வியாதியிலிருந்து ஜெபத்தினால் விடுதலைப்பெற்ற இராஜேஸ்வரியும் அவர்களது குடும்பத்தினரும் கர்த்தரின் அன்பை ஏற்று அறிக்கையிட்டிருப்பதால்;

### ஜெபிக்க

- விசுவாசியான ராஜேஸ்வரியையும் அவர்களது குடும்பத்தினரையும், தேவன் தனது உன்னத ஊழியத்தில் பயன்படுத்தி, அநேகரை தம்பக்கம் திரும்ப;
- தேவ பணி செய்யும் ஊழியர்களை அடிக்கடி கைதுசெய்து காவல் நிலையத்தில் வைத்து எச்சரிக்கும் செயலைப் பார்த்து புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கும் விசுவாசிகள் பயப்படாமல் விசுவாசத்தில் வளர;

## 2

செலாக்கி, டெகராடூன் மாவட்டம்

கைலாஸ் வர்மா & கீதா

### துதிக்க

- தீராத வயிற்றுவலியினால் நீண்ட நாட்களாக அவதிப்பட்டு வந்த சகோதரி சோந்தோஷ்-க்கு தொடர் ஜெபத்தினால் தேவன் கொடுத்த அற்புத சுகத்திற்காக;
- சரியான வேலை இல்லாததினால் குடும்பத்தினரால் புறக்கணிக்கப் பட்ட ராகேஷ்-க்கு ஜெபத்தினால் இப் போது நல்ல வேலை கிடைத்துள்ளது.

### ஜெபிக்க

- ஒருபக்க தலை வலியினாலும், குடும்பத்தில் ஒருமனமில்லாமலும் அதிகமாய் சோர்ந்துபோயுள்ள மீரா வின் வாழ்வில் தேவன் அற்புதங் களை நிகழ்த்த;
- கர்ப்பமடைந்திருக்கும் தன் மனை விக்கு பித்தப்பையில் இருக்கும் கற்களினால் சோர்ந்துபோயுள்ள கேசனின் மனைவிக்கு தேவன் அற்புத சுகத்தை அருள;

## 3

பர்ஹனி, உதம்சிங் நகர் மாவட்டம்

நித்தின் தாமஸ் & ஆஷா தாமஸ்

### துதிக்க

- கடந்த மாதம் 131 பேருக்கு கிறிஸ்து வின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட தில் 25 பேர் அவரை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண் டிருப்பதற்காக;
- கேலகேரா என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷத்தை சொல்வதற்கு எடுக் கப்படும் முயற்சி நல்ல பலனைத் தந்திருப்பதற்காக;

### ஜெபிக்க

- சிறுவர் பயிற்சி மையமும், சுவிசேஷ ஊழியமும் இணைந்து செயல்படும் மோகலோ கிராமத்தில், வளர்ந்து வரும் எதிர்ப்பிலிருந்து விசுவாசி களையும், பயிற்சி மைய சிறுவர் களையும் தேவன் பாதுகாக்க;
- நமது இயக்கம் பணி செய்யும் கிரா மங்களில் சுவிசேஷ ஊழியத்திற்க எதிராக உருவாகிவரும் எதிர்ப்பில், விசுவாசிகளும், ஊழியரும் காக்கப்பட;

## 4

சஹாஸ்பூர், டெகராடூன் மாவட்டம்

நரேஷ் நைனிவால் & சோனா

### துதிக்க

- கடந்த மாதம் 148 பேருக்கு கிறிஸ்து வின் தூய அன்பை பகிர்ந்தளித் ததில், 20 பேர் கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டிருப்பதற் காக;
- ஜஜ்ரா கிராம விகாஸ்-கிரன் தம்பதி கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஆசையாய் கேட்டதில், தேவ வார்த்தை அவர்கள் உள்ளத்தை ஊடுறுவியிருக்கிறதற்காக;

### ஜெபிக்க

- சுவிசேஷம் அறிவித்ததாக கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட் டால், வாழ்நாள் முழுவதும் சிறை யில் இருக்கவேண்டும், அவர்க ளுக்கு ஜாமினே கிடையாது என்ற கடினமான சட்டத்தை உத்தரகாண்ட் அரசாங்கமும் இயற்ற உள்ளது.
- நாம் பணிபுரியும் போக்ஷா, ராய்சீக், சய்னி, போஜ்பூர், கர்க்வ-ாலி, குமனி, நேபாலி இன மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் சுவிசேஷ ஊழியத்தில் தேவனது கரம் வல்லமையாய் செயல்பட;

## 5

சலீம்பூர், ஹரிதுவார் மாவட்டம்

அருண்குமார் & காஜல்

### துதிக்க

- சலீம்பூரைச் சேர்ந்த ஓம் குமார் முதல் முறையாக கிறிஸ்துவின் அன்பை அறிந்து, தன் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணித்திருப்பதற் காகவும்; விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காகவும்;
- கடினமான எதிர்ப்பின் மத்தியிலும் மஜ்ஜிரி என்ற புதிய கிராமத்தைச் சந்திக்கவும் கிறிஸ்துவின் நற்செய் தியை பல வீடுகளுக்குள் கொண்டு செல்லவும் கர்த்தர் கிருபை பாராட்டி யதற்காக;

### ஜெபிக்க

- காவடி எடுத்துக்கொண்டு கூட்டமாய் நடந்து செல்லும் மக்கள், தங்களு டைய மூடப் பழக்கவழக்கத்திலிருந்து விடுபட்டு உண்மையான தேவ அன்பை அறிந்து உணர்ந்துகொள்ள;
- கடந்த மாதம் நற்செய்தியை கேட்டி ருக்கும் 119 பேரும் கிறிஸ்துவின் அன்பை ஏற்றுக்கொள்ள, புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக் கும் மூன்று பேரும் விசுவாசத்தில் உறுதிப்படவும்;

## மகிபனின் கிருபை

கிட்டத்தட்ட ஒரு மாதமாக சகோதரி குக்கி-க்கு கைகளும் கால்களும் வீக்கம்கண்டு கடுமையான வலி இருந்ததால் மருத்துவ சிகிட்சைக்காக சுமார் 20,000/- ரூபாய் செலவுசெய்தார்; எந்தவித பயனும் இல்லை. ஒருநாள் நமது பணித்தள ஜெபக் கூடுகையில் கலந்துகொண்டார். அவரது பரிபூரண சுகத்திற்காக விசுவாசிகள் இணைந்து ஜெபித்தனர். ஒரு வாரத்திற்குள்ளாக அவருக்கு நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. இப்போது பரிபூரண சுகத்தை தேவன் அவருக்கு அருளியிருக்கிறார். ஜெபமே ஜெயம். அல்லேலூயா! - பிரதாப்கட், இராஜஸ்தான்

# முழு குடும்பத்துக்கும் மகிழ்ச்சி!

22 வயதாகும் திருமதி. காளி பிசாசின் பிடியில் சிக்கி கடுமையான அவஸ்தைப்பட்டார். அடிக்கடி நடுஇரவில் எழுந்து, யாரிடமும் சொல்லாமல் எங்காவது சென்றிடுவார். அசுத்த ஆவி அவரை அதிக பலவீனமாக்கியிருந்தது. குடும்பத்தினர் மிகவும் கவலையோடிருந்தனர். நமது மிஷனரி, காளியின் குடும்பத்தினருக்கும், காளிக்கும் சுவிசேஷம் அறிவித்து, இயேசு அருளும் விடுதலையையும், புது வாழ்வையும், வல்லமையையும் அறிவித்தார். அதை விசுவாசித்த குடும்பத்தினர் தொடர்ந்து ஜெபித்து வந்தனர். காளியிடம் கிரியை செய்த அசுத்த ஆவி அவரை விட்டு வெளியேறியது. முழுக் குடும்பமும் இப்போது மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். ஆமென். – குண்டல், ராஜஸ்தான்

## உத்திரப் பிரதேசம்

### 6

இம்லியாகலான், மிர்ஸாபூர் மாவட்டம்

ராஜேந்திரா பிரசாத் & மீனா தேவி

#### துதிக்க

- வயிற்று வலியினால் இரண்டு வருடமாக பல்வேறு இன்னல்களைச் சந்தித்த காஞ்சடிப்பூர் கிராமத்து சித்ராவுக்கு கிடைத்த சுகத்திற்காக;
- 2 பேர் புதிதாக திருமுழுக்கு எடுத்து, கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை தங்கள் குடும்பத்தாருக்கும் அயலகத்தாருக்கும் அறிக்கையிட்டிருப்பதற்காக;

#### ஜெபிக்க

- குடாஸ் என்ற கிராமத்தில் நாங்கள் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருந்த போது, எங்களை தடுத்து நிறுத்திய கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மனம் மாறி இரட்சிக்கப்பட;
- திருமுழுக்கிற்கு ஆயத்தமாயிருக்கும் ஐந்து பேரும், விசுவாசத்தை தளர விடாமல் தாங்கள் எடுத்த முடிவில் தைரியமாயிருந்து, திருமுழுக்கில் பங்குபெற்று சாட்சிபகர;

### 7

ஜெகதீஸ்பூர், சந்தௌலி மாவட்டம்

தாவீது & ஜெமிமா

#### துதிக்க

- நிக்னம்பூரில் வசிக்கும் நமது விசுவாசி அசோக்குமார் எதிர்பாராத விதமாக சந்தித்த விபத்தில் எந்த வித பெரிய காயமும் இன்றி கர்த்தர் அவரை காத்து இரட்சித்ததற்காக;
- ஜெகதீசரை என்ற கிராமத்தில் முதல் முறையாக 30 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக;

## ஜெபிக்க

- ஜெமிமாவுக்கு 18 மிமீ பித்தப்பை கல் பிரச்சனையை கண்டுபிடித்து அதை அறுவை சிகிச்சை மூலம் ஏற்றவேளையில் அகற்ற தேவன் கிருபை பாராட்டியிருப்பதற்காக;
- உத்திரப் பிரதேம் முழுவதும் 40 பேருக்கு திருமுழுக்கு கொடுக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் நல்லபடியாக கைகூடி வரப்பண்ண;

## 8

மமனியா, மிர்சாபூர் மாவட்டம்

பப்லு & சன்சலா

## துதிக்க

- சன்குல் கிராமத்தில் முதல் முறை யாக சுவிசேஷம் அறிவிக்க சென்ற போது, தேவன் திறந்த வாசலைக் கொடுத்து மக்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருந்ததற்காக;
- கடந்த மாதம் எட்டு இடத்தில் வீட்டு ஜெபக்குழு நடத்த கிடைத்த வாய்ப் புக்காகவும், திரளானோர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றதற்காகவும்;

## ஜெபிக்க

- அடுத்த மாதத்தில் புதிதாக ஒரு கிரா மத்தை சந்திக்கவும், 120 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் எடுக்கப் பட்டுவரும் முயற்சிகளை தேவன் கைக்கூடப்பண்ண;
- ஒவ்வொரு மாதமும் புதிதாக சிலரையாவது கிறிஸ்துவின் சீடர்க ளாக்கவேண்டும் என்று நானும் என் மனைவியும் எடுத்திருக்கிற முடிவை நிறைவேற்ற தேவன் கிருபை செய்வாராக;

## 9

ரொஹிலா, சீத்தாபூர் மாவட்டம்

ரஜினீஷ் குமார்

## துதிக்க

- பல கிராமங்களிலுள்ள 160 பேருக்கு சுவிசேஷம் அறிவித்ததில் 30 பேர் கிறிஸ்துவின் அன்பை விசுவாசிக்கத் துவங்கியிருப்பதற் காக;
- நீண்ட நாட்களுக்குப் பிறகு அனுஷ் குடும்பத்தினர் மறுபடியும் ஆராத னையில் கலந்துகொண்டு கர்த் தரை ஆசையாய் ஆராதித்திருப்ப தற்காக;

## ஜெபிக்க

- கேசவ்புரி என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க ஆயத்தப் பட்டு வருகிறோம். தேவன் திறந்த வாசலைக்கொடுத்து, புதிய விசு வாசிகளை கொடுக்க;
- தொண்டை பகுதியில் ஏற்பட்டி ருக்கும் புற்றுநோய் கட்டியை அகற் றும் சிகிச்சைக்காக காத்திருக்கும் சகோதரி ஜெயாவுக்கு பூரண சுகம் கிடைக்க;

# பகவான் "இயேசுவை அறியட்டும்"

**சுவிசேஷத்தைக் கேட்ட காவல்துறை அதிகாரி பிரேந்திர லோகராவும் அவரது மனைவியும், தேவனின் வார்த்தைக்கு செவிசாய்த்து ஆராதனைக்கு வரத் துவங்கினர். ஆனால் அவரது தகப்பனார் பகவான் லோகராவின் விசுவாசத்திற்கு தடை விதித்தார். "இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் நீ வீட்டில் இருக்கமுடியாது, வேறு இடத்திற்கு சென்றுதான் வசிக்கவேண்டும்" என்று உறுதியுடன் கூறுகிறார். பகவான் லோகராவை தேவன் சந்திக்கும்படியும், அவரே மூப்பராக முன் நின்று ஆராதனை நடத்தும் நாள் சீக்கிரம் வந்திடவும் ஜெபிப்போம். – பர்ஹராகோதி, பீஹார்**

## 10

சய்தாபூர், லக்கீம்பூர் கேரி மாவட்டம்

பிரிஜ்ராஜ் சிங் & பூனம்

### துதிக்க

- கடந்த மாதம் ராஜ்குமார், ரிங்கி தேவி ஆகிய இருவரும் திருமுழுக்கின் வழியாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டிருப்பதற்காக;
- ஏழு வருடங்களாக குழந்தை இல்லாதிருந்த சுமன்–அசோக் தம்பதியினர் ஜெபத்தினால் இப்போது ஏழு மாத குழந்தையை கருவில் சுமப்பதற்காக;

### ஜெபிக்க

- இம்மாதம் குறைந்தது 200 பேருக்காவது சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற எங்களது இலக்கை தேவன் நிறைவேற்றும்படிக்கு;
- திருமுழுக்கு எடுத்து கிறிஸ்தவின் மந்தையில் இணைய ஆயத்தமாயிருக்கும் ஐந்து பேரும் விசுவாசத்தில் உறுதியாயிருக்க;

## 11

கைசரிகஞ்ச், சீத்தாபூர் மாவட்டம்

சியாம் கிஷோர் & ரேனி தேவி

### துதிக்க

- தெரியாமல் விஷத்தைக் குடித்ததினால் சுகவீனமடைந்த விசுவாசி கமலேஷ்–ன் மகனை தேவன் ஆச்சரியவிதமாக பாதுகாத்ததற்காக;
- நெல்வாரி, பாரபங்கி என்ற இரண்டு கிராமங்களையும் சந்தித்து சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் அருளிய கிருபைக்காக;

### ஜெபிக்க

- திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாயிருக்கும் சந்தீப், விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும், அநேகருக்கு ஆசீர்வாதமாய் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும்;
- கடந்த மாதத்தில் சுவிசேஷ வார்த்தைகளை கேட்டிருப்போர் உள்ளத்தில் தேவன் கிரியை செய்து, கிறிஸ்துவின் அன்பிற்கு அடிபணிய;

## பஞ்சாப்

## 12

சக் சிக்கந்தர், அம்ரித்சர் மாவட்டம்

தீபக் ராஜ்வன்ஸ் & ரமன்தீப் கவுர்

### துதிக்க

- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த தோடு, தன் நண்பர்களுடன் மிஷ னரி தீபக்ராஜ்வன்ஸை தாக்க திட்டமிட்டு ஆலயத்திற்கு வந்த ஹெஜ்ராஜை தேவன் தொட்டு, ஆவியால் நிறைத்து தன் பக்கம் இழுத்துக்கொண்டதற்காக;
- பிசாசினால் பீடிக்கப்பட்டு, இரண்டு மாதமாக இரு கால்களும் நடக்க முடியாமல் படுக்கையில் இருந்த 15 வயது ஜெகன்தீப்-பை கர்த்தர் சுகமாக்கியதால், அவர் இப்போது கிறிஸ்துவின் தீவிர விசுவாசியாக மாறியிருப்பதற்காக;

### ஜெபிக்க

- விபத்தில் சிக்கி, தற்போது சுகம டைந்திருக்கும் குருப்ராஜ்-க்கு தலைபகுதில் ஏற்பட்டிருக்கும் காயமும் விரைவில் குணமாக;
- சக் சிக்கந்தரில் பிரதிஷ்டை செய்யப் பட ஆயத்தமாயிருக்கும் ஆலயத் தில் விசுவாசிகள் தேவ பிரசன் னத்தை உணரவும், அந்த ஆலயம் எல்லா ஜனமும் இணைந்து ஆரா திக்கக்கூடிய ஜெப ஆலயமாக மாற வும்;

## ஹரியானா

## 13

பெகோவா, குருஷேத்ரா மாவட்டம்

சரத் சந்திர டிகல் & லவ்லி நாயக்

### துதிக்க

- கடந்த மாதம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கவும், பின்தொடர் பணி செய்யவும், உபவாச ஜெபங்கள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள் நடத்தவும் கர்த்தர் பாராட்டின கிருபைக்காக;
- துல்ஹார் என்ற கிராமத்தில் முதல் முறையாக சுவிசேஷம் அறிவித்த தில் ஒரு குடும்பம் கர்த்தரை ஏற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுகின் றனர்.

### ஜெபிக்க

- ஆஸ்னாத்பூர் ஆலய வளர்ச்சியை தடுக்க முயற்சிக்கும், நமது ஆல யத்தின் அருகில் வசிக்கும் அங்கிள் திரிலோகசிங் சர்தார் என்ற நிலச் சுவாந்தார் தேவ அன்பினால் தொடப்பட;
- கடின உள்ளம் கொண்ட குஜார் மற்றும் ஜாட் மக்கள் கூட்டத்தை சுவிசேஷத்தால் சந்திக்கும் முற்சி யில் ஈடுபட்டிருக்கிறோம். திறந்த மனதோடு அவர்கள் ஏற்றுக் கொள்ள;

## 14

சாஹாபாத், குருஷேத்ரா மாவட்டம்

சுக்தேவ் சிங் & சுமன்

### துதிக்க

- தூசி மாசு அலர்ஜியிலிருந்து தர்ச னும், அசுத்த ஆவியின் பிடியிலி ருந்து ரேகாவும், லஜ்வர்டியும் விடு தலை பெற்றதற்காக;
- கடந்த மாதம் 100 பேருக்கு புதிதாக அறிவித்ததில் 2 பேர் கிறிஸ்துவின் அன்பை அறிக்கையிட்டதற்காக;

### ஜெபிக்க

- மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் சுரேந்தர கௌரை தேவன் விடு வித்து தெளிந்த மனநிலையோடு வாழ கிருபை செய்யும்படியாக;
- இடுப்பு வலியினால் மிகவும் அவதி யுறும் சகோதரி ஜிட்டோ பூரண சுகம் பெற்று தேவனுக்கு சாட்சியாய் வாழ;

## 15

பானிபட், பானிபட் மாவட்டம்

அசவ் குரியா & மிரா தண்டி

### துதிக்க

- கடந்த மாதம் 5 விசுவாசிகள் திரு முழுக்கின் வழியாக விசுவாசத்தை அறிக்கையிட்டிருப்பதற்காக;
- மனநிலை சரியில்லாமல் இருந்த விசுவாசி ரொனாக் தற்போது ஜெபத் தினால் சுகமடைந்தற்காக;

### ஜெபிக்க

- தொடர் ஜுரம், மஞ்சல்காமாலை, இரத்த அணு குறைவு காரணமாக அதிகமாக கஷ்டப்படும் ஊழியர் அசவ் குரியாவின் மனைவிக்காக;
- கடந்த மாதத்தில் கிறிஸ்துவின் சுவி சேஷத்தைக் கேட்டிருப்போர்களின் உள்ளத்தில் தேவன் கிரியை செய்து அவர்கள் வாழ்வை மாற்ற;

## விசுவாசம்!

சங்கி கிராமத்தைச் சேர்ந்த 27 வயதாகும் சகோதரி பாசு ரண்டாவும் அவரது சகோதரரும் விசுவாசிகள். இயேசுவை ஏற்றுக்கொள்ளாத அவரது மாமியார் பாசுவின் உணவில் “ஸ்லோ பாய்சன்” கலந்து கொடுத்ததால், சுகவீனமடைந்த பாசு ஆபத்தான நிலையில் மருத்துவமனை ஐ.சி.யு.வில் அனுமதிக்கப்பட்டார். மிகவும் பயந்துபோன பாசுவின் சகோதரர் நமது மிஷனரி சுனில் ராவத்திடம் உண்மையைக் கூறி ஜெபிக்கும்படி கேட்டார். மிஷனரி விசுவாசிகளுடன் இணைந்து அவருக்காக ஏறெடுத்த ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு பாசு ரண்டாவை சுகப்படுத்தியதால் அவர்கள் குடும்பமாக இப்போது மகிழ்ச்சியாய் வாழ்கின்றனர். கர்த்தருக்கே மகிமை! – சங்வி, மத்தியப் பிரதேசம்

# ராஜஸ்தான்

## 16

குண்டல், பிரதாப்கட் மாவட்டம்

ஈஸ்வர்லால் & சங்கிலா

### துதிக்க

- ரேகாவுக்கு வயிற்றுப் பகுதி கட்டி ஜெபத்தினால் மறைந்ததற்காக;
- நெஞ்சு வலியிலிருந்து திராஜ்மாலும், வாய்வு பிரச்சனையிலிருந்து மஹிபாலும் சுகம் பெற்றதற்காக;

### ஜெபிக்க

- உடல் முழுவதும் எரிவதுபோல் உணரும் சாந்தி பென்னை ஆண்டவர் குணமாக்க;
- சுவிசேஷத்தை ஆர்வமாய் கேட்ட அனைவரையும் தேவன் தம்பக்கம் இழுத்துக்கொள்வாராக;

## 17

தாண்டிஓப்ரி, டுங்கர்பூர் மாவட்டம்

தினேஷ் ஆட் & சுகுணா

### துதிக்க

- அநேக ஆண்டுகள் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துவந்த சகோதரி சுபத்திக்கு இரட்டைக் குழந்தை பிறந்திருப்பதற்காக;
- மூட்டு வலியினால் அல்லல்பட்ட டெல்சிங்-வினிடா தம்பதிக்கு தேவன் சுகத்தை அருளியதற்காக;

### ஜெபிக்க

- வலது கையில் அதிகமான வலியினால் வேதனைப்படும் சகோதரி டீனாவை தேவன் சுகமாக்க;
- தாண்டிஓப்ரியில் ஆலய கட்டுமானப் பணி விரைவில் முடிவடையவும்;

## 18

சாலம்கட், பிரதாப்கட் மாவட்டம்

வால்சிங் & போஜி

### துதிக்க

- புதிதாக இரண்டு பேர் திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்ததற்காகவும்; புதிதாக 4 குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதற்காகவும்;
- விசுவாசத்தினிமித்தம் தன்னை துன்பப்படுத்திய தன் சகோதரன் மஹிபாலுக்காக; தன் சக விசுவாசிகளோடு இணைந்து ஜெபித்த சுந்தர்லாலின் ஜெபத்தை கேட்ட கர்த்தர் மஹிபாலனை இரட்சித்திருப்பதற்காக;

### ஜெபிக்க

- பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கும் ரீனாவுக்காகவும்; சிரோகி கிராமத்தில் முதல்முறை சுவிசேஷம் அறிவிக்க எடுக்கப்படும் முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிக்கவும்;
- நமது சிறுவர் கல்விப் பயிற்யில் பயிலும் சக்வா, சலம்கார், சுகக்புரா கிராமங்களின் சிறுவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றத்தை காண;

# கிறிஸ்துவுக்குள் பிரியமான அறுவடைப் பங்காளர்களே!

அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் சார்பில் எங்கள் இதயம் நிறைந்த கனிவான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்!

ஒவ்வொரு வருடமும் நமது பணித்தளங்களில், இறைமைந்தன் இயேசுவின் பிறப்பைக் கொண்டாட, உதாரத்துவமான காணிக்கைகளை நீங்கள் கொடுத்து ஊக்குவிப்பதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறோம்.

நமது மிஷனரிகள் இந்த வருடமும், பணித்தளங்களிலுள்ள விசுவாசிகள் மற்றும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களோடு, கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடி மகிழவும், கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தையும் இரட்சிப்பின் செய்தியை பகிர்ந்துக் கொள்ளவும், நமது நற்செய்திப் பணியாளர் எடுக்கும் முயற்சிகளுக்காக ஜெபியுங்கள். உங்கள் வெகுமதிகளை தாராளமாக அள்ளித் தந்திடுங்கள்!

கிறிஸ்துமஸ் என்றாலே வெகுமதிகளின் சிறப்பு: இறையுலகிலிருந்து இம்மண்ணுலகிற்கு இயேசு என்ற வெகுமதி, இயேசு பாலகனுக்கு சாஸ்திரிகளின் வெகுமதி, இயேசுவின் பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களுக்கு கொடுக்கும் வெகுமதி என்பது நமது அன்பின் பாரம்பரியம். எனவே நமது அன்புக்குரிய அருட்பணியாளர்களும் தங்களது விசுவாசிகளுடன் குடும்பத்துடன் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை எளிமையுடனும், இன்பமுடன் கொண்டாட கீழ்கண்ட விதத்தில் நமது காணிக்கையை பரிசாக்குவோம்!

## பணித்தள கிறிஸ்துமஸ் நிகழ்வுகளின் தேவைகள்

| | |
|---|---|
| பணித்தளங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்வு (71 x 5,000) | ₹3,55,000 |
| சிறுவர் கல்வி உதவி மையங்களில் கிறிஸ்துமஸ் (59 x 3,000) | ₹1,77,000 |
| அருட்பணியாளர்களுக்கு (160 x 3500) | ₹5,60,000 |
| சமுதாய முன்னேற்ற பணியாளர்களுக்கு (59 x 2,000) | ₹1,18,000 |
| தொழில்கல்வி பயிற்சியாளர்களுக்கு (7 x 3,000) | ₹21,000 |
| மொத்தம் | ₹12,31,000 |

உங்கள் அனைவருக்கும் எங்களது இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!

**அருட்திரு. இரா. ஜான் கிருபாகரன்**
உப தலைவர்.

**அருட்திரு. R.T. ஜெயப்பால்**
நிர்வாக இயக்குனர்.

# மத்தியப் பிரதேசம்

## 19

சங்வி, பர்வானி மாவட்டம்

சுனில் ராவத் & சகீனா

### துதிக்க

- புரிபாய் சௌகானுக்கு கர்ப்பப்பை யில் காணப்பட்ட பெரிய கட்டியை தேவன் மறையச் செய்ததற்காக;
- கடந்த மாதம் 190 பேர் சுவிசேஷத் தைக் கேட்டதில், எட்டு பேர் விசுவாசி களாயினர், 5 பேர் திருமுழுக்கு வழியாக விசுவாசத்தை அறிக்கை யிட்டனர்;

### ஜெபிக்க

- குடிக்கு அடிமையாகியிருக்கும் விசு வாசியின் கணவர் முகேஷ்தாவர், முற்றிலும் விடுபட்டு, குடும்பத் துடன் மகிழ்ச்சியாய் வாழ;
- கடந்த மாதம் வரை சுவிசேஷத்தை கேள்விப்பட்டிருப்போர் அனை வரும் இரட்சிப்பைக் கட்டளையிட;

## 20

புல்வானியா, கர்கோன் மாவட்டம்

ராகுல் ஜாம்ரே & சஞ்சனா

### துதிக்க

- 146 பேர் முதல்முறையாக கிறிஸ்து வின் அன்பின் சுவிசேஷத்தை ஆர் வமாய் கேட்டதில், 13 பேர் விசுவாசி களாய் மாறியுள்ளதற்காக;
- பிறந்து 5 நாட்களான குழந்தை மிகவும் சுகவீனமாய்க் காணப்பட் டது; விசுவாசிகளின் ஜெபம் குழந் தைக்கு சுகம் தந்திருப்பதற்காக;

### ஜெபிக்க

- விசுவாசி காசிராம் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட்டு பரிசுத்தமாய் சாட்சியின் வாழ்க்கை வாழவும்;
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக் கும் பிஷ்டன் கிராமத்து மக்கள், கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு அறிக்கையிட;

## 21

பகவான்புரா, கர்கோன் மாவட்டம்

ஆசிஷ் சிசோடியா & ஆர்த்தி

### துதிக்க

- வாந்தி-பேதியினால் அவதியுற்ற வராய் பல நாட்கள் மருத்துவம னையில் இருந்த 21 வயது ராம் சிங்கை விசுவாசிகளின் ஜெபத்தி னால் தேவன் சுகப்படுத்தியதற்காக;
- சமார்குண்டியா, கபிரி, பம்புரா, காக்டியா, புல்வானியா ஆகிய கிராமங்களில் தேவன் வல்லமை யாய் கிரியைசெய்கிறபடியால் அநேகர் மனந்திரும்பி இயேசுவின் அன்பை ஏற்றுக்கொள்கிறபடியால்;

### ஜெபிக்க

- சுவிசேஷத்திற்கு அநேகர் வாஞ்சை யாயுள்ள கப்ரி கிராமத்தில், ஒருசிலர் கிராம தலைவரின் உதவியுடன் எதிர்க் கிறார்கள். அவர்கள் மனம்மாற;

- சுவிசேஷத்திற்கு ஆசையாய் செவி கொடுக்கும் மக்களிடம் சிலர் தவறான காரியங்களைச் சொல்லி குழப்புகின் றனர். இருப்பினும் சுவிசேஷத்தை கேட்டவர்கள் தைரியமாய் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட;

## குஜராத்

**22**

சரசடி, மஹிசாகர் மாவட்டம்

ராஜேஷ் தாமோர் & சுனல்பேன்

### துதிக்க

- ரய்டா கிராமத்தில் ஞாயிறு ஆரா தனை துவங்கப்பட்டதற்காகவும்; நான்கு பேர் திருமுழுகின் வழியாக கிறிஸ்துவின் அன்பை தைரியமா ய் அறிக்கையிட்டிருப்பதற்காக;
- பெற்றோர்கள் விசுவாசிகளாய் இருந்தபோதும், சுவிசேஷத்தை எதிர்த்துவந்த 20 வயதாகும் வாலிபப் பெண் காஜன் தற்போது கிறிஸ்துவின் அன்பிற்கு தன்னை அர்ப்பணித்திருப்பதற்காக;

### ஜெபிக்க

- கிராம தலைவர் கெமாபாய் பட்டா லியா மனம் மாறவும்; சரஸடி கிராம மக்களின் எதிர்ப்பு நமது விசுவாசி களை பாதிக்காமலிருக்கவும்;
- ரெய்டா கிராமத்தில் ஆராதனை தடையின்றி நடைபெறவும்; பக்க வாத நோயினால் கஷ்டப்படும் சோமாபாயை கர்த்தர் தம் கரம் கொண்டு தொட்டு சுகமாக்கவும்;



## தாங்குவோரின் கவனத்திற்கு

**(FOR SUBSCRIBERS ATTENTION)**

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அருட்பணிப் பங்காளர்களுக்கு,**

**உங்கள் காணிக்கையை *Cash Deposit / NEFT / IMPS / MO* மூலமாக செலுத்தி யவுடன் எங்களுக்கு *SMS / Whatsapp / email* / கைப்பேசி வழியாக தெரியப்படுத்து-ம்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். *(94443 96201 / 89036 57933 camindi-achennai@gmail.com) NEFT / IMPS* பரிவர்த்தனை செய்யும்போது நீங்கள் நிரப்பும் படிவத்தின் *Remarks Column*ல் (இதர குறிப்புகளுக்குரிய இடத்தில்) உங்கள் பெயரைக் குறிப்பிடவும்.**

## OUR CORRENT BANK DETAILS

A/c Name :
**CHRIST FOR ALL MINISTRIES INDIA**
A/c. No : **000901126766**
Type of A/c : **Savings Account**
Name of the Bank : **ICICI BANK**
Branch : **Ayanavaram. Chennai.**
IFS Code : **ICIC0001686**

A/c Name :
**CHRIST FOR ALL MINISTRIES** – INDIA
A/c No : 35903764348
Type of A/c : **Current Account**
Name of the Bank : **STATE BANK OF INDIA**
Branch : **Ayanavaram. Chennai.**
IFS Code : **SBIN0002202**

## 23

ஜாம்புடி, தாகோத் மாவட்டம்

மெகுல் கட்டாரா & சகினா பென்

### துதிக்க

- அநேக ஆண்டுகள் வலிப்பு நோயால் அவதிப்பட்ட சோமாலி கட்டாரா, சுவிசேஷத்தை கேட்டு, தன் வாழ்வை இயேசுவுக்கு அற்பணித்தபோது பரிபூரண சுகம் பெற்றதற்காக;
- பல்வேறு குடும்பப் பிரச்சனையினால் மனச் சோர்வுடன் இருந்த ஜும்லிபென் கிறிஸ்துவின் சமாதான செய்தியைக் கேட்டதினால், கவலை நீங்கி மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவதற்காக;

### ஜெபிக்க

- சரஸடியில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள ஆலயத்திற்கு, கிராமத் தலைவர் ஹோமாபாய் அனுமதி கொடுக்கவும், கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும்;
- டிக்கரி கிராமத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வரும் எதிர்ப்பை, தேவன் ஆதரவாய் மாற்றி தன் ராஜ்யத்தை அக்கிராமத்தில் ஸ்தாபிக்கும்படி;

## 24

டுங்கிரி, தாகோத் மாவட்டம்

ரமேஷ் பாபோர் & மனிஷாபென்

### துதிக்க

- இரவு நேரத்தில் வீட்டிற்குள் நுழைந்து கடிக்க முயற்சித்த விஷப் பாம்பிடமிருந்து 65 வயது நிரம்பிய பகன் பாயை கர்த்தர் கிருபையாய் பாதுகாத்ததற்காக;
- கடந்த மாதம் 120 பேருக்கு சுவிஷம் அறிவிக்கப்பட்டதில் 10 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருப்பதற்காக;

## கடமை உணர்வு

தாஜ்புரா கிராமத்தில் வசித்து வந்த கோகுலின் மேல் காவல் நிலையத்தில் ஒரு புகார் பதியப்பட்டிருந்தது. அது அவரது முழு குடும்பத்தின் சமாதானத்தையும் பாதித்தது. சோகத்துடன் காணப்பட்ட கோகுலையும் அவரது மனைவியையும் சந்தித்த நமது மிஷனரி இயேசுவைக் குறித்து எடுத்துக் கூறினார். பின் அனைவரும் இணைந்து ஜெபித்தனர். ஒரு வாரத்திற்குள் காவல் நிலையத்திலிருந்து ஒரு அழைப்பு வந்தது. காவல்துறை அதிகாரி அந்த வழக்கை முடித்து வைத்ததாக அறிவித்தார். அவர்கள் குடும்பத்தினருக்கு எல்லையில்லா ஆனந்தம். இப்போது குடும்பமாக ஜெபத்தில் அமர்ந்து கர்த்தரை ஆராதிக்கின்றனர். – சலேம்பூர், உத்தரகாண்ட்

## ஜெபிக்க

- சோமிதா பென்னின் வீடு கட்டு மானப் பணியை நல்லபடியாய் முடிக்கவும், கோவிந் பாய்க்கு நீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கை முடிவுக்கு கொண்டுவர வும் கர்த்தர் கிருபை செய்வாராக;
- சுவிசேஷத்தை ஆர்வமாய் கேட்கும் வஸ்னா பாயும் அவரது குடும்பத்தி னரும் இயேசுவின் அன்புக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க;

## 25

கென்பூர், மஹிசாகர் மாவட்டம்

சாவ்சிங்பாய் & லலிதாபென்

## துதிக்க

- முடக்கு வாத நோயால் நீண்டநாள் கடுமையான வலியுடன் வாழ்ந்து-வந்த சுனிதாவுக்கு விசுவாசிகளின் ஜெபத்தினால் தேவன் கொடுத்த சுகத்திற்காக;
- 200க்கும் அதிகமானோருக்கு சுவி சேஷம் அறிவிக்கப்பட்டதில், இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண் டிருப்பதற்காக;

## ஜெபிக்க

- சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் வாழும் கெட்டேவாட் கிராமத்திலுள்ள நமது விசுவாசி களின் வாழ்வில் தேவன் நல்ல பொருளாதார மற்றும் சமுதாய உயர்வைக் கட்டளையிட;
- விஷப் பாம்பு கடிக்காக சிகிட்சை பெற்றுவரும் நமது விசுவாசி சுமின்டா பென்னை கர்த்தர் சுகப் படுத்தி குடும்பத்தினர், நண்பர், உற வினர் மத்தியில் சாட்சியாய் நிறுத்த;

## 26

கேட், அரவல்லி மாவட்டம்

மெல்வின் கிறிஸ்டினா & மீனாக்ஷி

## துதிக்க

- வீர்பூர் கிராமத்தில் புதிதாக ஒரு குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்டு கர்த்தரை மகிமைப் படுத்தியிருப்பதற்காக;
- ஆஸ்துமா நோய் அதிகரித்து மரணத்தை நோக்கி சென்ற நமது விசுவாசி பவனா கல்சவாவை தேவன் சுகப்படுத்தி மறுவாழ்வு கொடுத்திருப்பதற்காக;

## ஜெபிக்க

- விசுவாசத்தில் தடுமாறும் ஹெட் கிராமத்து விசுவாசிகளை, கர்த்தர் பெலப்படுத்தி அற்புதத்தின் வழி யாக தம்பக்கம் இழுத்துக்கொள்ள;
- புதிதாக திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ளும் புதிய விசுவாசிகளை தேவன் விசுவாசத்தில் பெலப்படுத்த;

# பீஹார்

## 27

பர்ஹரா கோத்தி, பூர்னியா மாவட்டம்

சுரேந்தர குமார் & அக்னா

### துதிக்க

- முதல் முறையாக லலித் நகர் கிராமத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றதற்காகவும். 33 நபர்களுக்கு தனித் தனியாக சுவிசேஷேம் பகிர்ந்தளிக் கப்பட்டதற்காகவும்;
- பர்சா, திலக் டோலா என்ற இரண்டு கிராமத்திலும் வேதாகம வகுப்பு நடத்தியதில் அநேகர் ஆர்வமாய் கலந்துகொண்டு பயன்பெற்றதற்காக;

### ஜெபிக்க

- புதிதாக கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கும் ஜோதிராஜும் அவரது கணவரும் விசுவாசத்தில் வளரவும், தொடர்ந்து சத்தியத்தில் வேரூன்றவும்;
- கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் சொந்த குடும்பத்தார்களிடமிருந்தே எதிர்ப்பை சந்திக்கும் ஸ்ரவான் சர்மாவும் அவரது மனைவியும் விசுவாசத்தில் உறுதியாய் இருக்க;

## 28

அரரியா, அரரியா மாவட்டம்

அமர்குமார் & சுனித்தா குமார்

### துதிக்க

- 31 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், 5 பேரை கர்த்தருக்குள் நடத்தவும், ஞாயிறு ஆராதனை, வீட்டு ஜெபம், உபவாச ஜெபம் தடையில்லாமல் நடத்தவும் தேவன் கிருபை பாராட்டியதற்காக;
- பாஹி என்ற கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவித்தபோது தெரிவு செய்து, முதல் முறையாக சுவி

## மறுநாளே வேலை கிடைத்தது.

குஜர்புரா கிராமத்தின் ஹேப்பி என்ற சகோதரர் மஜ்பி சீக் இனத்தைச் சேர்ந்தவர். அவருக்கு கடந்த ஒரு வருடமாக சரியான வேலை இல்லை. எந்த வேலைக்குச் சென்றாலும் ஒரு வாரத்திற்குள்ளாக, ஏதாவது ஒரு காரணத்தால் வேலை பறிபோய்விடும். இது அவரது குடும்பத்தினருக்கு பண நெருக்கடியையும், மன நெருக்கடியையும் தந்தது. அவரது மனைவி அவரை மதிக்காமல் சண்டை போட்டுக்கொண்டிருப்பார். சிக்சிக்கந்தரிலுள்ள நமது மிஷனரி தீபக் ராஜ்வன்சை சந்தித்து ஜெபித்துச் சென்றனர். மறுநாளே ஒரு வேலை கிடைத்தது. அந்த வேலையில் முழுமாத சம்பளமும் கிடைத்தது. இப்போது முழுக் குடும்பமும் மகிழ்ச்சியாய் உள்ளனர். கர்த்தருக்கே மகிமை. – சக்சிக்கந்தர், பஞ்சாப்

சேஷத்திற்கான வரவேற்பை தெரிந்கொள்ள தேவன் தயவு பாராட்டியதற்காக;

## ஜெபிக்க

- சிறுவர் பயிற்சி மையத்தில் கலந்துகொள்ளும் சிறுவர்களின் நற்குணம் மற்றும் சாட்சியுள்ள வாழ்வின் வழியாக அவர்களது பெற்றோர்களும் உறவினர்களும் தேவ அன்பின் ஆழத்தை அறிந்து உணர;
- சுவிசேஷ விதையை விதைக்க கடினமான பூமியாக காணப்படும் மக்கள் மனதை தேவன் உழுது சுவிசேஷ விதையை விதைப்பதற்கு விதைக்கு ஏற்றாற்போல மாற்ற;

# ஒடிசா

## 29

சுக்குடுபாஜ, ராயகடா மாவட்டம்

அமித் பஸ்கா & கீதாஞ்சலி

## துதிக்க

- கடந்த மாதம் இரண்டு பேர் திருமுழுக்கின் வழியாக இயேசுவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட்டிருபதற்காக;
- கடந்த மாதம் சில புற மதத்தினருக்கு கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்தளிக்க கிடைத்த வாய்ப்புக்காகவும், அவர்கள் ஆர்வமாய் கேட்டதற்காகவும்;

## ஜெபிக்க

- ஜெபத்தினால் அற்புத சுகம் பெற்றவர்கள், அப்படியே சென்றுவிடாதபடி அற்புத நாயகராம் இயேசு கிறிஸ்துவை தங்கள் இருதயத்தில் குடியமர்த்திக்கொள்ளவும்;
- நமது விசுவாசிகளை குழப்பி, கிறிஸ்தவ விரோத இயக்கத்தோடு இணைத்துக்கொள்ள முயற்சிக்கும் மற்ற மதத்தைச் சேர்ந்த நண்பர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட;

## காணாமல்போன ஆடு அங்கிட்

அங்கிட் சத்யா என்ற 20 வயது இளைஞர் திடீரென காணாமல் போய்விட்டார். குடும்பத்தினர் அவரை எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. எந்தவித தொடர்பும் இல்லை. காவல் நிலையத்தில் புகார் செய்தனர். ஆனாலும் எந்த பயனும் இல்லை. மிகுந்த வேதனையுடன் காணப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்காக விசுவாசிகள் ஊக்கத்தோடு ஜெபித்தனர். இரண்டு மாதம் கழித்து அந்த இளைஞர் வீடு திரும்பினார். ஜெபத்தினாலேயே இது சாத்தியமானது என்று குடும்பத்தினர் கூறி இயேசுவைப் பின்பற்ற துவங்கியிருக்கின்றனர்.

– பஹவான்புரா, மத்தியப் பிரதேசம்

# கர்நாடகா

## 30

பாகேப்பள்ளி, சிக்கபல்லாபூர் மாவட்டம்

சத்தியப்பா & சியாமலாபாய்

### துதிக்க

- கடந்த மாதம் மரக்கவலிதண்டாவில் 2 பேரும், சகவல் கிராமத்தில் 2 பேரும், பாஹேபள்ளியில் 2 பேரும் திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் அன்பை அறிக்கையிட்டதற்காக;
- பிசாசின் பிடியில் அகப்பட்டு இருந்ததினால், சரியாக சாப்பிட முடியாமல், சுகவீனமாய் காணப்பட்ட மலக்கவரிப்பள்ளி தண்டாவை தேவன் விடுவித்து சுகப்படுத்த;

### ஜெபிக்க

- திருமணத்திற்காக காத்திருக்கும் மாதவா (28), ஹர்ச பிரியா (24), சந்தோஷ் (25), பிரீத்தி (25) ஆகியோருக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்துதவ ஜெபிப்போம்.
- அடுத்த மாதத்திலிருந்து சுவிசேஷ ஊழியம் செய்ய திட்டமிட்டிருக்கும் சவ்டசமுத்திரம் பகுதியில் சுவிசேஷ பணிசெய்ய தகுதியான ஊழியரை தரும்படி ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## 31

கொண்டப்பள்ளி, கிருஷ்ணா மாவட்டம்

புஜிபாபு & வரகுமாரி

### துதிக்க

- கடந்தமாதம் தையல் பயிற்சி மையம் துவங்கவும், அநேக வாலிப பெண்கள் ஆசையாய் கலந்து கொண்டு பயிற்சி எடுக்கவும் தேவன் உதவியதற்காக;
- நான்கு பேருக்கு திருமுழுக்கு மூலம் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டிருப்பதற்காக;

### ஜெபிக்க

- சி.ஹெச். மாதவத்தை சிறுவர் கல்வி பயிற்சி மையம் துவங்க எடுக்கப்படும் முயற்சியை கர்த்தர் கைகூடப் பண்ண;
- கன மழையின் காரணமாக வெள்ளத்தால் சூழப்பட்டு அவதியுறும் விசுவாசிகள் சகஜநிலைக்குத் திரும்ப;
- வறுமையில் வாழ்ந்துவருகதால் அவர்கள் வீடுகளில் ஆண்டவரை ஆராதிக்க இடவசதியில்லை; விசுவாசிகள் கூடி ஆராதிக்கக்கூடிய நல்லதொரு இடம் கிடைக்க.

**நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? – இயேசு**

# அனைவருக்கும் கிறிஸ்து
**ஊழியங்கள்**

அன்பர் இயேசுவை
அறியாதோருக்கு
அறிவிக்கும்
அதி உன்னத பணி!

## உதயம்

இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நற்செய்தியைக் கேள்விப்படாத இந்திய ஜனத்திரளுக்கு இயேசுவின் அன்பினைப் பகிர்ந்து, திருச்சபையை நாட்டும் பணிக்கு தூய ஆவியானவரால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம், ஒரு மிஷனெரி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சுதேச சுவிசேஷ இயக்கம் சபை பாகுபாடின்றி அனைத்துச் சபைகளோடும் கரம் கோர்த்து பணிசெய்யத் தன்னை அர்ப்பணித்திருக்கிறது. நற்செய்தியை ஏற்றுக்கொள்வோரை சீடத்துவ வாழ்வில் நிலைப்படுத்தி, திருச்சபையாக அவர்களை ஒருங்கிணைத்து, அத்தியாவசிய சமுதாய நலப்பணிகள் மூலம் மறுமலர்ச்சி கண்ட சமுதாயத்தை தனது தரிசனமாக்கிச் செயல்படுகிறது.

### நோக்கம்

கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத கடைசி இந்தியனையும் சந்தித்து சீடராக்குவது.

### முக்கியத்துவம்

ஜெபம், அர்ப்பணம், எளிய வாழ்வு, கூட்டுறவு, துணை வலிமை கொடுத்தல்

### அறுவடைப் பணிகள்

சுவிசேஷ பிரகடனம், சீடத்துவத்தை நிலைப்படுத்துவது, திருச்சபைகளை ஸ்தாபிப்பது, சீடர்களின் திறமைகளை வளர்ப்பது, சுதேச தலைமைத்துவத்தைக் கட்டுவது, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடுவது.

### அனுப்புவோரின் பங்கு

பாரதத்தை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்கும் இப்புனித பயணத்தில் உங்களுக்கு தேவன் தந்திருக்கும் உன்னத பங்கினை அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் மூலம் நிறைவேற்ற உங்களை வருந்தி அழைக்கிறோம்.

### விண்ணப்ப ஊழியம்

களப்பணியாளர்களுக்காகத் தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் ஜெபியுங்கள்.

### மக்கதோனியரின் மாண்பு

- ☑ பணித்தளப் பணியாளர்களை மாதம் ரூ.4,000/- கொடுத்துத் தத்தெடுத்துத் தாங்குங்கள்
- ☑ சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளுக்கு பிரதி மாதம் ரூ.1,200/- கொடுத்து ஆதரியுங்கள்
- ☑ உயர்ந்த இலட்சியத்துடன் செயல்படும் இவ்வியக்கத்தின் தேவைக்கு பிரதி மாதம் உங்களால் இயன்ற காணிக்கை தந்து உதவுங்கள்.

### தாலந்துகள் சமர்ப்பணம்

- ☑ இயக்கத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக உங்கள் பகுதியின் ஒருங்கிணைப்பாளராக பொறுப்பேற்றுச் செயல்படுங்கள்.
- ☑ இசை, ஆலோசனை, ஆத்தும ஆதாயம், முதலிய தாலந்துகளை பொது நலனுக்காக முதலீடு செய்யுங்கள்.

**இயேசுவை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள். ரோமர் 10:14-15**







## பல்லாயிரம் மொழிகள்
## பல்வேறு நிறங்கள்
## பலநூறு கலாச்சாரம்

ஆனால் கிறிஸ்துமஸ்
கொண்டாட்டம் ஒருவருக்கே!
அது நம் ஆண்டவர் இயேசுவுக்கே!













**CHRIST FOR ALL MINISTRIES - India (Benash School Campus),**
18/6, Narayana Street, Ayanavaram, Chennai - 600 023
Cell: 91-8903657933 | Email: camindiachennai@gmail.com | www.cam-india.org

| | | |
|---|---|---|
| திரு. விசுவாசம் நன்னன்<br>தலைவர் | மறைதிரு. இரா. ஜான் கிருபாகரன்<br>உப தலைவர்<br>9444396201 | மறைதிரு.. R.T. ஜெயப்பால்<br>நிர்வாக இயக்குநர்<br>8903657933 |
| திரு. S. பால் ஜெயசிங்<br>ஒருங்கிணைப்பாளர் | டாக்டர் J. டேனியல்<br>செயலர் | திரு. N. ஆபிரகாம் ஐசக் ராஜ்<br>நிதிக்காவலர் |